விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 09 செவ்வாய்க்கிழமை (25.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 250

## இந்திய இழுவைப் படகு அச்சுறுத்தல் தொடர்பில் விரைவில் தீர்வு எட்டப்படும்



### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இந்திய இழுவைப் படகு அச்சுறுத்தல் தொடர்பில் விரைவில் தீர்வு எட்டப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர 23

## வீட்டில் பூட்டி வைக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்ட

### 7 வயது சிறுமி வவுனியாவில் மீட்பு

(வவுனியா)

வவுனியா, பெரியதம்பனை பகுதியில் வீட்டு அறை ஒன்றில் பூட்டி வைக்கப்பட்டு கொடுமைப் படுத்தப்பட்ட 7 வயது சிறுமி செட்டிகுளம் பிரதேச செயலக பெண்கள், சிறுவர் பிரிவு உத்தி யோகத்தர்களால் நேற்று மீட் கப்பட்டு பொலிஸாரி டம் ஒப்படைக்கப்பட் 23

## இலங்கையில் புகையிலைக்கு முழுமையான தடை

(கொழும்பு)

இலங்கையில் புகையிலை சார்ந்த பொருட்கள் விற் பனை, காட்சிப்படுத்தல் மற் றும் பொதுப் பயன்பாடு ஆகிய வற்றுக்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மருந்துகள், புகையிலை மற்றும் ஆல்கஹால் தடுப்புக் கான புதிய செயற் றிட்டத்தை உரு 23

# குற்றங்களை குறைப்பதற்கு சட்டங்களை கடுமையாக்க அரசாங்கம் நடவடிக்கை

## நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

(கொழும்பு)

குற்றங்களை குறைப்பதற்காக சட்ட திட்டங்களை கடுமையாக்க அரசாங்கம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும் என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றினையடுத்து, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையில் மரண தண்டனை கடந்த 50 வருடங்களாக நடைமுறைப் படுத்தப்படவில்லை.

இதனை மீண்டும் நடை 23




## பேத்தியின் பூப்புனித நீராட்டு விழாவில் தாத்தா மரணம்

(கிளிநொச்சி)

பேத்தியின் பூப்புனித கொண்டாட்டத்தின்போது தாத்தா உயிரிழந்த சோக சம்ப வம் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி கல்மடுநகர் பகுதியில் நேற்று முன்தினம் பூப்பூனித நீராட்டு விழா நடைபெறு 23

## மக்கள் மீள்குடியேற காணிகளை விடுவியுங்கள்

### புதிய இராணுவத் தளபதியிடம் மாவட்ட அரச அதிபர் க.மகேசன்

(யாழ்ப்பாணம்)

மக்கள் மீள்குடியேற இராணுவத் தால் இதுவரை விடுவிக்காத காணி களை உடனடியாக விடுவியுங் கள் என யாழ். மாவட்டத்துக் 02



யாழ். - கொழும்பு

## குளிரூட்டப்பட்ட ரயில் சேவை

### சனியன்று மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையேயான குளிரூட்டப் பட்ட தொடருந்து சேவை எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை மீள வும் ஆரம்பிக்கப்பட 23

## தண்ணீர் போத்தல்கள், ஷம்போ ஹேர் ஜெல், ஸ்ரோக்கு விரைவில் தடை

(கொழும்பு)

தண்ணீர் போத்தல்கள், ஷம்போ, ஹேர் ஜெல், ஸ்ரோ போன்ற பொருட்களை பயன் படுத்த விரைவில் தடை விதிக்கப் படவுள்ளது.

ஒற்றை பயன்பாட்டு பிளாஸ் டிக் பொருட்களை 2021 முதல் தடை செய்ய அமைச்சரவையில் முன்மொழியப்பட உள்ளது.

சுற்றுச்சூழல் அதிகார சபை (சி.இ.ஏ) அதற்கான முன் மொழிவுகளை வழங்கியுள்ளது.

ஷம்போ மற்றும் ஹேர் ஜெல், பிளாஸ்டிக் ஸ்ரோ, பிளாஸ்டிக் நீர் போத்தல்களை தடை செய்வதில் கவனம் செலுத்துகிறது.

இத்தகைய பொருட்களின் பயன்பாடு காரணமாக சுற்றுச் சூழலுக்கு ஏற்பட் 23

## 19ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய இடமளியோம்

### சஜித் அணியினர் தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகமான அதிகார பேராசை காரணமாக புதிய அரசாங்கம் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய தயாராகி வருகிறது.

அதற்கு இடமளிக்க மாட்டோம் என சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியினர் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் இந்த நட வடிக்கையால் மக் களின் உரிமைகள் 23

## அங்கஜனை அமைச்சராக்கி விக்னேஸ்வரனுக்கு முடிவு கட்டுவோம்

### அமைச்சர் விமல் வீரவன்ஸ

(கொழும்பு)

அங்கஜனுக்கு அமைச்சுப் பதவி வழங்கி அவரைப் பலப்படுத்தி விக்னேஸ் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 101 வயதான மூதாட்டி காலமானார்



(யாழ்ப்பாணம்)

101 வயது வரை வாழ்ந்த முதாட்டி ஒருவர் நேற்று காலமானார்.

நயினாதீவு 1ம் வட்டாரத்தை பிறப்பிட மாகவும் தற்போது திருநெல்வேலி கலா சாலை வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா குலசேகரம் தனது 101 ஆவது வயதில் நேற்று காலமானார்

இவர் நயினாதீவைச் சேர்ந்த காலஞ் சென்ற ஓய்வு நிலை அதிபர் வேலாயுதம் குலசேகரத்தின் மனைவியுமாவார் (ம-3)

## மக்கள் மீள்குடி...

கான புதிய இராணுவத் தளபதியிடம் யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிதாக பதவியேற்றுள்ள யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார நேற்றைய தினம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத் திற்கு விஜயத்தினை மேற்கொண்டு யாழ். மாவட்ட அரசாங்க அதிபருடன் சந்திப்பினை மேற்கொண்டார்.

குறித்த சந்திப்பின் போதே யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேற்படி கோரிக்கையினை விடுத்துள்ளார். (ம-3)


## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்

FWC

வருடாந்த பொதுக்கூட்டம் - 2020

நாட்டில் ஏற்பட்ட கோவிட் - 19 நோய் நிலைமை காரணமாகப் பிற்போடப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 06.09.2020 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொண்டைமானாறிலுள்ள வெளிக்கள நிலையத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

**அங்கத்தவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.**

இ. குகானந்தன்
செயலாளர்.

(3678)



## வாழ்த்துகின்றோம்




யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் 02.04.2012 தொடக்கம் 31.03.2017 வரை அதிபராகக் கடமையாற்றி இன்று 25.08.2020 இல் வ/பெரியதம்பனை மகா வித்தியாலயத்தில் இருந்து ஓய்வு பெறும்

**திரு. அம்பலவாணர் இரங்கநாதன் (SLPS-I)**

அவர்களை ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்
இளவாலை

(3674)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தொழில்நுட்ப பீடம்
அறிவியல்நகர், கிளிநொச்சி

மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தொழில்நுட்ப பீட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் பின்வருமாறு மீள ஆரம்பிக்கும்.

- கல்வியாண்டு ( 2018/19) - முதலாம் வருட முதலாம் அரையாண்டு 14.09.2020 இல் இருந்து
- கல்வியாண்டு ( 2015/16) - நான்காம் வருட முதலாம் அரையாண்டு 07.09.2020 இல் இருந்து

கல்வியாண்டு (2016/17) - இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டுக்கான கல்வி நடவடிக்கைகளும் கல்வியாண்டு ( 2017/18) –முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுக்கான கல்வி நடவடிக்கைகளும் 24.08.2020 இல் இருந்து ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பரீட்சைகள் பின்வருமாறு திட்டமிடப்பட்டுள்ளன.

- ➢ கல்வியாண்டு (2016/17) - இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு- 14.09.2020 – 02.10.2020
- ➢ கல்வியாண்டு (2017/18) – முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு –28.09.2020 – 16.10.2020

பதிவாளர்
24.08.2020

(C-136)



## மரண அறிவித்தல்



பிறப்பு 16 - 06 - 1930

இறப்பு 13 - 08 - 2020

### திருமதி தங்கமுத்து கந்தசாமி

யாழ். கரவெட்டி, கோவில் சந்தையடியை பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து கந்தசாமி 13.08.2020 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புத்திரியும் பொன்னம்பலம் கந்தசாமியின் (அதிபர் - ஸ்கந்தபுரம் வித்தியாலயம்) அன்பு மனைவியும் மனோகரன், மகேந்திரன், சிவமதி, சிவமலர், சிவானந்தன், காலஞ்சென்ற மனோகரி, சிவசுதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சரஸ்வதி - பொன்னையா, பரமேஸ்வரி - சிவராசா, மகேஸ்வரி- சிவசுப்பிரமணியம், நித்தியானந்தம் ஆகியோரின் சகோதரியும் ஜெயமதி, ராசமலர், தவச்செல்வம், மகேந்திரராசா, ஷாந்தினி, வீணா, ஸ்டெப்னி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெயந்தன், தானியா, லவன், ரதீஷன், சதீஷன், கலைமதி, சுகந்தன், சுதர்ஷன், சுரேசன், சுபாங்கன், மலர்வேணி, ஆதவன், நவீன், யுகானா, லோகேஷ், கோகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 27.08.2020 பகல் இலண்டன் நேரப்படி 10.00am - 11.30 am, 51 waddon Road, CRYDON இல்லத்தில் நடைபெற்று CRYDON மயானத்தில் தகனம் செய்யப்படும். அதேநேரம் இலங்கை நேரப்படி, அவர் பிறந்த கோவிற் சந்தையடி வீட்டில் அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(3676)

தகவல்:-
குடும்பத்தினர்

"ஸ்கந்தபதி".
கோவிற் சந்தையடி, கரவெட்டி.



## பூநகரி கமநல சேவை நிலையம் - 2020/2021
## கால போக பயிர்ச் செய்கை கூட்டம்

மேற்படி பூநகரி கமநல சேவை நிலைய அதிகார பிரிவிற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களுக்கான 2020/2021 கால போக பயிர்ச் செய்கை கூட்டங்கள் இன்று 2020.08.25 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதன் பிரகாரம் 2020.08.25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு ஞானிமடம் கமக்கார அமைப்பிற்கும் 10.30 மணிக்கு வாடியடி கமக்கார அமைப்பிற்கும் 2020.08.27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலங்கேணி கமக்கார அமைப்பிற்கும் 10.30 மணிக்கு பரமன்கிராய் கமக்கார அமைப்பிற்கும் 2020.08.28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு செட்டியகுறிச்சி கமக்கார அமைப்பிற்கும் 10.30 மணிக்கு கறுக்காய்தீவு கமக்கார அமைப்பிற்கும் 2020.09.03 ஆம் திகதி வியாழக்கிழமை 9.00 மணிக்கு மட்டுவில் நாடு கிழக்கு கமக்கார அமைப்பிற்கும் 10.30 கொல்லகுறிச்சி கமக்கார அமைப்பிற்கும் 2020.09.04 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நல்லூர், 10.00 மணிக்கு சாமிப்புலம், 11.00 மணிக்கு முக்கொம்பன் கமக்கார அமைப்புகளிற்கும் 2020.09.07 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு மட்டுவில் நாடு மேற்கு, 10.30 மணிக்கு கௌதாரிமுனை கமக்கார அமைப்புகளிற்கும் 2020.09.08 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு செம்பன்குன்று மற்றும் 10.30 மணிக்கு பள்ளிக்குடா, சிவபூமி, பிள்ளையார் நகர் கமக்கார அமைப்புகளுக்கும் காலபோக கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமையால் சகல விவசாயிகளும் தவறாது கலந்து கொண்டு மானியப் பசளை பட்டியல் பதிவு, வயல் காணிகளை அடையாளப்படுத்தல், சந்தா செலுத்துதல், ஏக்கர் வரி செலுத்துதல், விவசாய அடையாள அட்டைப் பதிவுகள், குத்தகைப் பதிவுகள் போன்ற சகல செயற்பாடுகளையும் பூர்த்தி செய்து 2020/2021 கால போக பயிர்ச் செய்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கமநல சேவைகள் குழு,
கமநல சேவை நிலையம்,
பூநகரி.

(C- 140)

# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் செல்வி

# மணிவண்ணன் லக்ஷிகா



"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தில் மாணப்பெரிது"

கடந்த 28.07.2020 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் தெல்லிப்பழை துர்க் காதேவியின் மீளா அடியவள் அமரர் செல்வி மணிவண்ணன் லக்ஷிகா அவர்களின் சிவப் பேறு குறித்த செய்தியறிந்து உடனோடி வந்து ஒத்தாசை நல்கிய உற்றார், உறவினர்கள், அயலவர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலை பேராதனை கண்டி மருத்துவ துறையினருக்கும், ஏழாலை பெரியதம்பிரான் ஆலய சமூகமும் பரிபாலன சபையினருக்கும், யா/வயாவிளான் மத்திய கல்லூரி, யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை, யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினருக்கும் அறிவாலயா கல்வியகம் சூராவத்தை மற்றும் பொருளியற் கல்லூரி, சுன்னாகம் ஆகியவற்றின் நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர் சமூகத்தினருக்கும் யாழ்ப்பாணம், சுன்னாகம் மக்கள் வங்கி உத்தியோகத்தர் களுக்கும் யாழ்ப்பாணம், சுன்னாகம் உள்ளிட்ட அனைத்து வர்த்தக சமூகத்தினருக்கும் எமது விவசாய நடவடிக்கையுடன் தொடர்புடைய தொழில்வல்லுநர்கள், விவசாய சம்மேளனத்தினர், பாரவூர்தி தொழில் நண்பர்கள் மற்றும் கொழும்பு, தம்புள்ள உள்ளிட்ட அனைத்துச் சந்தைப்படுத் துநர்களுக்கும் தகவலறிந்து நேரடியாக வருகை தந்து ஆறுதல்கூறிய அரசியல் பிரமுகர்களுக் கும் பைப்ஸ்ரார், ஞானமுருகன், ஞானகலா ஆகிய கழகம் சார் நண்பர்கள், இறுதிக் கிரியை களை செவ்வனே சிறப்புற நடாத்திய குருக்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு மகளின் இறைபதச் செய்தி கேட்டு நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி, முகநூல் மற்றும் சமூக வலைத்தளங்களின் ஊடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் நியூ ஜெப்னா, தமிழ்ருவின் வலைத்தளங்களில் செய்தி வெளியிட்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பதாகைகள் மற்றும் பிரசுரங்கள் வெளியிட்டோருக் கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி யோருக்கும் இத்தகவலை உற்ற நேரத்தில் பிரசுரித்து உதவிய வலம்புரிப் பத்திரிகைக் குழுமத்தினருக்கும் எமது நன்றியினைத் தெரிவித் துக் கொள்கின்றோம்.

**அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 25.08.2020 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணி யளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 27.08.2020 வியாழக் கிழமை அன்று பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங் கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னா ரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அன்னை மடியில்
21.12.2004

அம்பிகை மடியில்
28.07.2020

எங்கள் அன்புச் செல்வப்புதல்வி
எம்முடன் வாழ்ந்து எமைப் பெருமிதப்படுத்தி
நிறைவு தந்து
இறைபக்தி, அன்பு, அரவணைப்பு
அடுத்தவர் மனது நோகாத பண்பு
அனைத்தும் ஒருங்கிணைத்து எமை
மகிழ்வுடன் வாழவைத்த அன்புத்
தெய்வத்தினை நினைவு கூருவோமாக

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

துர்க்கா ஸ்ரோர்ஸ்
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

(C-120)

077 614 1764

தகவல்:
க.மணிவண்ணன் (ராசன்)
குடும்பத்தினர்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு பூரண ஆதரவு

## பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**பௌத்த சிங்கள பேரினவாத அரசாங்கம் நாட்டில் அசுர பலத்துடன் ஆட்சி அமைத்துள்ள நிலையில் தமிழ் மக்கள் தமக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான நீதியைப் பெற்றுக்கொள்ளும் போராட்டங்களை தீவிரப்படுத்த வேண்டிய அவசியமான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.**

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தன்று (30.08.2020) வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நடத்தப்படும் கவனயீர்ப்புப் போராட்டம் மற்றும் பேரணிகளுக்கு தமிழ் மக்கள் தேசிய கூட்டணி முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்வதுடன் பொதுமக்களை இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கின்றது.

பௌத்த சிங்கள பேரினவாத அரசாங்கம் நாட்டில் அசுர பலத்துடன் ஆட்சி அமைத்துள்ள நிலையில் தமிழ் மக்கள் தமக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளும் போராட்டங்களைத் தீவிரப்படுத்த வேண்டிய அவசியமான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் 30 ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்ட நிகழ்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்று நடத்தப்படும் போது தான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைப்பது சாத்தியமாகும். அதனால், சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்றுக்கான ஏற்பாடுகளை சாத்தியமான எல்லா வழிகளையும் பயன்படுத்தி மேற்கொள்ளுமாறு ஐ.நா. மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவற்றை வலியுறுத்தி நடத்தப்படும் இந்தப் போராட்டங்களில் பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களை முழுமையான ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வடமாகாணத்தில் யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து பேரணி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த பேரணி யாழ்.மாவட்ட செயலகம் வரை சென்று அங்கே ஐ.நாவிடம் கையளிக்கப்படுவதற்கான மகஜர் ஒன்று கொடுக்கப்படவிருக்கின்றது.

அதேபோல கிழக்கு மாகாணத்தில் கல்லடி பாலத்தில் இருந்து பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பேரணி காந்தி பூங்கா வரை சென்று ஐ.நாவுக்கான மகஜர் ஒன்றைக் கையளிக்கவிருக்கின்றது. மக்கள் விழிப்புணர்வோடு இருந்து மேற்படி பேரணிகள் பெரு வெற்றியடைய தமது ஆதரவை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அழைப்பு விடுகிக்கிறது. (2-7)

## இந்திய - சீன உறவில் சரிவு நிலை

# நிக்கோபார் துறைமுகம் இலங்கைக்கு பாதகமானதல்ல; சீனாவிற்கான மறைமுக எச்சரிக்கையாக இருக்கலாம்

(கொழும்பு)

இந்தியா தனது பாதுகாப்பு அமைப்புகளை பலப்படுத்தும் முயற்சிகளில் நிக்கோபார் தீவுகளில் மேற்கொண்டுள்ள கடல் மற்றும் விமானப் படைத் தளங்கள் மிக முக்கியமானது. இந்த அறிவிப்பை இந்தியா சீனாவுக்கு மறைமுகமாக அளிக்கும் எச்சரிக்கை என்று கருதலாமே தவிர இலங்கைக்கு பாதகமான விடயமல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவ புலனாய்வு பிரிவின் நிபுணரும் தெற்காசிய விவகாரங்கள் தொடர்பான ஆய்வாளருமான கேர்ணல் (ஓய்வு) ஆர்.ஹரிகரன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனை தெரிவித்தார்.

**கேள்வி:-** நிக்கோபார் தீவில் அமைக்க உள்ள துறைமுகம் இந்தியாவின் பாதுகாப்பு மூலோபாயத்தின் முக்கிய நகர்வாகக் கருதலாமா?

**பதில்:-** நிக்கோபார் தீவில் அமைக்க உள்ள இந்திய க்டற்படை தளம், இந்தியாவின் கடல் வழி பாதுகாப்புக்கு மட்டும் அல்லாமல், தெற்காசியாவின் இந்துமா சமுத்திரப் பாதையின் பாதுகாப்பிலும் தாக்கம் ஏற்படுத்தும் ஒரு முக்கிய திருப்பம் என கருதலாம்.

ஏனெனில், பூகோள ரீதியாக இந்தியாவின் அந்தமான்-நிக்கோ பார் தீவுகளின் ஊடாவே, தென் கிழக்காசிய மற்றும் கிழக்காசிய நாடுகளுக்கான வணிக கப்பல்களின் கடல் வழிப்பாதை அமைந்துள்ளது.

அந்த வழியைத்தான் உலகின் பாதிக்கு மேலான வணிக கப்பல்கள், கிழக்காசியாவின் நுழைவாயில் என்று கருதப்படும், மலாக்கா ஜலசந்தியை சென்றடைய உபயோகிக்கின்றன.

**கேள்வி:-** இந்தத் திட்டத்தினால் இலங்கைக்கு எவ்வாறான தாக்கம் ஏற்படும்?

**பதில்:-** இலங்கை இந்தியாவின் நெருங்கிய நேச நாடு. ஏற்கனவே, இந்திய- இலங்கைக் கடற்படைகள் பல ஆண்டுகளாக ஒருங்கிணைந்து செயற்பட மற்றும் இலங்கை கடற்படை வீரர் தரத்தை உயர்த்த இந்தியாவில் உள்ள பயிற்சிக் கூடங்களை உபயோகிக்கும் ஒப்பந்தங்கள் செயற்பாட்டில் உள்ளன. இந்த நிலை மேலும் தொடரும் என்பது என் அனுமானம். ஆகவே இலங்கையின் கடல்வழிப் பாதுகாப்பை இது மேலும் அதிகரிக்கவே செய்யும்.

**கேள்வி:-** கொழும்பு துறைமுகத்தின் மீது இந்தியா கொண்டிருந்த நம்பிக்கை இல்லாமல் போனதாலா நிக்கோபார் துறைமுகம் குறித்து கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது?


**பதில்:-** இது தவறான கருத்து. கொழும்பு துறைமுகம் உலகில் முதல் திறமையாக இயக்கப்படும் 30 துறைமுகங்களில் ஒன்றாகும். ஆகவேதான் இந்தியாவின் ஏறத்தாழ 70 சதவிகிதம் "கண்டெய்னர்" வணிக கப்பல்கள் கொழும்பை உபயோகிக்கின்றன.

ஆகவே அதை எளிதில் மாற்ற முடியாது. ஏனெனில், பூகோள அமைப்பில் இந்துமா சமுத்திரத்தில் இலங்கை இந்தியாவுக்கு மிக அண்மையில் உள்ளது. இதற்கு மாறாக நிக்கோபார் ஏறத்தாழ 3000 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**கேள்வி:-** இந்துமா சமுத்திரத்தில் சீனாவின் தந்திரோபாயமான நகர்வுகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர இந்த துறைமுகத்தைப் பயன்படுத்தலாமா?

**பதில்:-** இந்தியப் பாதுகாப்புத் துறை நெடுங்காலமாக அந்தமான் - நிக்கோபார் தீவுகளில் பாதுகாப்பு அரண் அமைப்பதைப் பற்றி பல ஆண்டுகளாக பேசிக்கொண்டிருந்தது.

சரிந்து வரும் இந்திய-சீன



உறவுச் சூழ்நிலையில் இந்தியா தனது பாதுகாப்பு அமைப்புகளை பலப்படுத்தும் முயற்சிகளில் நிக்கோபாரில் மேற்கொண்டுள்ள கடல் மற்றும் விமான படைத் தளங்கள் மிக முக்கிய பங்கு உண்டு. ஆகவே, இந்த அறிவிப்பை இந்தியா சீனாவுக்கு மறைமுகமாக அளிக்கும் எச்சரிக்கை என்று கருதலாம்.

**கேள்வி:-** கொழும்பு முனையத்தின் அபிவிருத்தியை இந்தியாவிற்கு வழங்க ஏற்கனவே ஒப்புதல் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆனால் மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ள ராஜபக்ஷ சகோதரர்கள் அதனை தொடர்வதாக இல்லை. இந்த விடயத்தில் டில்லியின் பிரதியணுகுமுறை எவ்வாறிருக்கும் ?

**பதில்:-** இந்த விடயத்தில், இந்தியா இராஜதந்திர ரீதியில் இலங்கைக்கு அழுத்தம் ஏற்கனேவே தருகிறது என்பது என் கருத்து. இலங்கைக்கு அதன் பன்னாட்டு கடன்களுக்கு வட்டி கொடுக்கவே பெரும் பாடாக உள்ளது.

அதற்கு ஈட்டுக் கடன் அளிக்குமாறு இலங்கை தொடர்ந்து இந்தியாவை கேட்டு வருகிறது. இந்தியா அதற்கு பேச்சுவார்த்தை தொடர்வதாகக் கூறிவருகிறது. ஆகவேதான் ராஜபக்ஷ சகோதரர்கள் கொழும்பு முனையத்தில் இந்தியாவுக்கு அளித்த ஒப்புதல் தவிர்க்கப்பட்டதாகத் திட்டவட்டமாக அறிவிக்கவில்லை என்பது என் அனுமானம்.

இதைத் தவிர, சீன உதவியுடன் கொழும்பில் உருவாகும் பொருளாதார கேந்திரம் முடியும் தறுவாயில் உள்ளது. அதில் இந்திய வணிகப் புள்ளிகள் பெருமளவில் பங்கு பெற்றால் தான் அதை இலாபகரமாக நடத்த முடியும்.

மேலும், இலங்கையில் தற்போது முடங்கிப் போன சுற்றுலாப் பயணிகள் வருகையை உயிர்ப்பிக்கவும் இந்தியா தேவை. ஆகவே இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க பல்வேறு வழிகள் உள்ளன. அது இலங்கை அரசுக்கும் தெரியும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

# தேர்ச்சிப் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்தவுடன் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவோம்

(கொழும்பு)

தேர்ச்சிப் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்தவுடன் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகளை வெளியிடவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் ஜனிட்டா லியனகே தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு 36 பாடநெறிகளுக்கான தேர்ச்சிப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

பெரும்பாலான பரீட்சைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதற்கு குறித்த தேர்ச்சிப் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டியது அவசியாகும். எனவே தேர்ச்சிப் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்தவுடன் பல்கலைக்கழக வெட்டுப் புள்ளிகளை வெளியிடவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஜ-2)

# இராசிபலன்

**25.08.2020**
**ஆவணி 09, செவ்வாய்க்கிழமை**
**சப்தமி பிற்பகல் 5.08 மணிவரை**
**விசாகம் முன்னிரவு 7.08 மணிவரை**
**சுபநேரம் 10.35 - 12.05 மணிவரை**
**இராகுகாலம் 3.05 - 4.35 மணிவரை**
**சந்திராஷ்டமம்-ரேவதி, அச்சுவினி**

வளவன்

**மேஷம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை, இறை வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பெற்றோர் மீதான பாசம் கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழில் முயற்சியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும்.

**துலாம்:** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்:** விரும்பிய காரியங்கள் விரும்பியபடியே கைகூடும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வழிபாடு குதூகலம் தரும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு:** சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம் பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மகரம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

"முடிவு" என்னும் விதை முளைக்க "அமைதி" என்னும் மண் தேவை.

# எலிக்காய்ச்சல் பரவல் தீவிரம்

## ❖4 ஆயிரத்து 554 பேர் பாதிப்பு
## ❖37 பேர் உயிரிழப்பு



**(கொழும்பு)**

**நாட்டில் எலிக்காய்ச்சல் மிகத் தீவிரமாக பரவி வருவதாக தொற்று நோய் பிரிவு எச்சரித்துள்ளது.**

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 4 ஆயிரத்து 554 பேர் எலிக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் 37 பேர் எலிக்காய்ச்சலினால் உயிரிழந்துள்ளதாக தொற்று நோய் பிரிவின் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அதிகமாக எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக இரத்தினபுரி மாவட்டம் பதிவாகியுள்ளது. அங்கு பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 146 ஆக அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொனராகலை மாவட்டத்தில் மாத்திரம் இதுவரை எலிக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் காரணமாக நாட்டில் இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளனர். எனினும் இந்த வருடத்தில் எலிக்காய்ச்சலினால் 37 பேர் உயிரிழந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ)

# நீரில் மூழ்கி இரு இளைஞர்கள் மாயம்

(கொழும்பு)

கல்கிஸை கடலில் நீராடச் சென்றபோது நீரில் மூழ்கி காணாமல்போன இரு இளைஞர்களை தேடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

18 மற்றும் 19 வயதுடைய இரு இளைஞர்களும் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

மொத்தமாக ஏழு பேர் நீராடச் சென்று காணாமல்போன நிலையில், அவர்களில் 5 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையிலேயே காணாமல்போன ஏனைய இருவரையும் தேடும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஜ-2)

# மஞ்சள்தூள் பாவனையால் ஆபத்து

## மீண்டும் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் சமகாலத்தில் விற்பனை செய்யப்படும் மஞ்சள் தூள் மனித பாவனைக்கு பொருத்தமானது அல்லவென நுகர்வோர் விவகார அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், மஞ்சள் தூள் கலப்படம் செய்து விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் சபை எச்சரித்துள்ளது.

அண்மையில் நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படும் மஞ்சள் தூள் உள்ளிட்ட ஏனைய பொருட்களின் மாதிரிகளை பெற்று சோதனையொன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, அரிசி மா, கோதுமை மா, பருப்பு, கடலைப் பருப்பு உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தரமானதாக காணப்பட்ட நிலையில், மஞ்சள் தூள் மாத்திரம் மறு வடிவமைப்பு செய்யப்பட்டுள்ள விடயம் தெரிய வந்துள்ளது.

சில இடங்களில் மஞ்சள் தூளில் இரசாயனப் பொருட்கள் மற்றும் நிறமிகளும் பயன்படுத்தப்பட்டு வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இவ்வாறு பயன்படுத்தப்படும் இரசாயன பொருட்களால் உடலுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாகவும் குறித்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

மஞ்சள் தூள்களில் இவ்வாறு கலப்படம் செய்து விற்பனை செய்து வரும் வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரவுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டில் மஞ்சள் இறக்குமதி தடைப்பட்டுள்ளது. இதன் காரணமாக மஞ்சளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மஞ்சள் தூள் தொடர்பில் பல தடவைகள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# கிணற்றில் தவறி விழுந்த சிறுவன் பலி

**(கிண்ணியா)**

**கிண்ணியா பூவரசன்தீவு கிராமத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஏழு வயது சிறுவன் கிணற்றில் விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.**

**கிண்ணியா பூவரசன்தீவு கிராமத்தில் வழமைபோன்று மாலை வேளையில் சக நண்பர்களுடன் நிஜாம் அஸ்னி (வயது-7) எனும் குறித்த சிறுவன் விளையாட்டில் ஈடுபட்டிருந்த போது அங்கே அமைந்துள்ள பாவனையில்லாத கிணற்றில் அவன் தவறுதலாக விழுந்ததில் இம் மரணம் ஏற்பட்டுள்ளது.**

**இந்நிலையில் உயிரிழந்த குறித்த சிறுவனின் உடல் கிண்ணியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணையினை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)**

# அரச நியமனத்தில் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள்

## வடக்கு ஆளுநரிடம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அரச நியமனங்கள் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் வடக்கு மாகாண ஆளுநரிடம் நேற்று மகஜர் கையளித்தனர். அரசாங்கத்தி னால் 50 ஆயிரம் பட்டதாரி களுக்கான வேலைவாய்ப்பு நாடு பூராகவும் வழங்கப்பட வுள்ளது.

பட்டதாரிகளுக்கான அரச நியமனக் கடிதங்கள் அனு ப்பி வைக்கப்பட்டுள்ள நிலை யில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரத்து 450 இற்கும் மேற் பட்ட பட்டதாரி களுக்கான நிய மனங்கள் நிராகரிக்கப்பட்டுள்ள




தாக பட்டதாரிகளுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த விடயம் தொடர்பில் நேற்று யாழ்.மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் ஒன்றிணைந்து கலந்துரை யாடியதோடு வடக்கு மாகாண ஆளுநரிடம் தமது நியமன த்தை உறுதிப்படுத்துமாறு கோரி மகஜர் ஒன்றையும் கையளித் தனர்.

குறித்த மகஜரில் நிரா கரிக்கப்பட்ட காரணங்களாக குறிப்பிடப்பட்டுள்ள EPF-bETF பிரச்சினை மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழ கங்களில் பட்டப்படிப்பினை முடித்தவர்களுக்கான பிரச் சினை மற்றும் 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் பிரச்சினை போன்ற மூன்று விடயங்களை உள்ளடக்கிவட மாகாண ஆளு நரிடம் மகஜர் கையளித்துள் ளனர்.

குறித்த விடயங்கள் தொட ர்பில் உரிய தரப்பினருக்கு அதனை தெளிவுபடுத்தி யாழ். மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமன த்தை வழங்க ஆவன செய்யு மாறு கோரி மகஜரினை கைய ளித்துள்ளனர்.

எனினும் ஏற்க னவே அரசாங்கத்தினால் நிய மனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பட்டதாரிகள் எதிர்வரும் மாதம் 2ஆம் திகதி தமது கடமைகளை ஆரம்பிக் கின்ற நிலைமையில் நிரா கரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கும் எதிர்வரும் 2 ஆம் திகதிக்குள் உரிய தீர்வு பெற்றுத்தர வேண் டும் என பட்டதாரிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-8)



கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மருத்துவ முகாமில் 78 பேருக்கு வாசிப்பு கண்ணாடிகள் வழங்கப்பட்டதுடன் 136 மக்களுக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு பரிசோதனைகள், உடல் திணிவு சுட்டி என்பன பரிசோதிக்கப்பட்டன.



பொன்னாலை கலசெட்டியவத்தை சித்தி விநா யகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் கடந்த வெள் ளிக்கிழமை இடம் பெற்றது.

## மக்கள் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை சாவகச்சேரி பிரதேசசபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

2021ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கும் போது அதில் பொதுமக்களின் கோரிக்கை களுக்கு முன்னுரிமை அளிக்க சாவகச்சேரி பிரதேசசபையினர் திட்டமிட்டுள்ளனர்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே இம் முடிவு எடுக்கப்பட்டது.

எதிர் வரும் 31 ஆம் திகதி சாவகச் சேரி பிரதேச சபையில் 2021 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் தயாரிப்பது தொடர்பான கலந்து ரையாடல் இடம்பெற வுள்ள நிலையில் அதில் பொது மக்க ளின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க பிரதேச சபைத் தவிசாளர் க.வாம தேவன் தீர்மானித்துள்ளது டன்.அதற்கு உறுப்பினர்களும் இணங்கி ஆதரவு தர வேண் டும் எனக் கேட்டுக்கொண்டு ள்ளார்.

இது தொடர்பாக பிரதேச சபைத் தவிசாளர் சபை யில் கருத்து தெரிவிக்கை யில்,

பொதுமக்களிடம் இருந்து பிரதேசசபைக்கு நேரடியாக பல கோரிக்கைகள் வந்துள்ளன. அதனை பட்ஜெட் தயாரிப்பின் போது கவனத்தில் எடுத்து நிறைவேற்ற வேண்டும். இவ் வருட பட்ஜெட்டிலும் கடந்த வருடத்தைப் போன்று உறுப்பி னர்களுக்கென தனித் தனி யான நிதி ஒதுக்கீடு இருக்கும்.

உறுப்பினர்கள் தமது ஒதுக் கீட்டில் சிறு தொகையை வீதிப் பெயர்ப்பலகைகள் அமைக்க ஒதுக்கினால் அது நல்ல விடய மாக இருக்கும்.

வீதிகளுக்கு பெயர்ப்பலகை இல்லாமை பெரும் சவாலாகக் காணப்படுகிறது.

எனவே உறுப்பினர்கள் அபிவிருத்தி திட்ட முன்மொழி வுகளோடு பாதீடு தொடர்பான கலந்துரையாடலுக்கு வருகை தர வேண்டும் என மேலும் அவர் தெரிவித் திருந் தார். (ஐ-30)

## அருட்சுனைஞர் பயிற்சி ஆரம்பம்

(குப்பிழான்)

தமிழ் வழிபாட்டுக் கூடம் நடத்தும் சைவத்தமிழ் அருட் சுனைஞர் (அர்ச்சகர்) பயிற்சி நெறி எதிர்வரும் முதலாம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆரம்ப கட்டப் பயிற்சிநெறி ஒருவார காலம் நடைபெறும். தொடர் பயிற்சிகள் திருக்கோ வில் குருகுல கல்வி முறையில் இடம்பெற்று மகா சிவராத்திரி தினத்தன்று பட்டயச் சான் றிதழ் வழங்கலும், குரு நிலைப்படுத்தலும் இடம்பெ றும்.

ஆகம வழியில் திருக்கோ வில் பூசைகள், குடமுழுக்கு கள், வாழ்வியற் சடங்குகள் பயிற்றுவிக்கப்படும். மேலதிக மாக உளவளத் துணை, சோதி டம், மொழிக் கற்கைகள் இடம் பெறும்.

வயது, கல்வித் தகைமை அடிப்படைத் தகுதியாக 'கருத் திற் கொள்ளப்படமாட்டாது. சுய ஒழுக்கம், சைவசமய விழு மியப் பண்புகள் கருத்திற் கொள் ளப்படும்.

குறித்த பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்பு பவர்கள் 077 694 2272 என்ற தொலைபேசி இலக்கத் திற்கு அருட்சுனைஞர் பயிற்சி நெறி எனக் குறிப்பிட்டுத் தங்கள் பெயர், முகவரி, தொடர்பு தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறுஞ் செய்தி யாக (sms) அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (5-18)

## வீதி விபத்தில் பெண் ஒருவர் படுகாயம்

(கிளிநொச்சி)


கிளிநொச்சி ஏ-9 வீதியில் கிளிநொச்சிமத்திய கல்லூரிக்கு முன்பாக நேற்று மதியம் இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பப் பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

ஆனந்தபுரம் செல்வா வீதி யைச் சேர்ந்த பெண்ணொரு வரே இவ்வாறு படுகாயமடைந் துள்ளார்.

பாடசாலையிலிருந்து பிள் ளைகளை ஏற்றி வரச் சென்ற போதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்து தொடர்பான மேல திக விசாரணைகளை கிளி நொச்சி பொலிஸார் முன்னெ டுத்து வருகின்றனர். (5-8)

## வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீச்சு



(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது நள் ளிரவு வேளை பெற்றோல் குண்டு தாக்குதல் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இமையாணன் வெள்ளை ரோட் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீதே கடந்த சனிக் கிழமை நள்ளிரவு பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது.

இதில் அங்கிருந்த கதிரை கள், துவிச்சக்கரவண்டி மற்றும் ஜன்னல் என்பன சேதமடை ந்துள்ளன. இச் சம்பவம் தொட ர்பில் வல்வெட்டித்துறை பொலி ஸில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. (5-60)

# சேவை நலன் பாராட்டு விழா



திரு. கணபதிப்பிள்ளை
நடராசலிங்கம்
(பாடசாலைப் பணியாளர்,
மு/முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை)

எமது பாடசாலையில் கடந்த 06.09.2016
முதல் பாடசாலைப் பணியாளராகக்
கடமையாற்றி 25.08.2020 இன்று
தனது 55 ஆவது வயதில் சேவையில் இருந்து
ஓய்வு பெற்றுச் செல்லும்
திரு. கணபதிப்பிள்ளை நடராசலிங்கம்
அவர்களின் அளப்பரிய சேவையை மனமுவந்து
பாராட்டுவதோடு, நீண்ட ஆயுளுடன்
சீரும் சிறப்புமாக வாழ
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

பாடசாலை நலன்புரிச் சங்கம்,
மு/முத்துஐயன்கட்டு இடதுகரை
அ.த.க.பாடசாலை.

(3669)


# கட்டடத்தில் இருந்து வீழ்ந்த இளைஞர் பலி

(ஏறாவூர்)

புதிய அரசாங்கத்தின் பட்டதாரி பயிலுநர் தொழில் வழங்கும் பெயர்ப் பட்டியலில் பெயர் உள்ளடக்கப்பட்டிருந்த இளைஞன் கடமையைப் பொறுப்பேற்கு முன்னரே கட்டடத்தில் இருந்து விழுந்து பலியான சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

முனைக்காடு கிராமத்தில் வசிக்கும் சச்சிதானந்தன் விக்னேஸ்வரன் (வயது -29) என்ற இளைஞனே இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

# நீரில் மூழ்கி மாணவன் பலி!

(கொழும்பு)

மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் ஏழு பேர் தங்காலை கடலில் குளிக்கும் போது இருவர் கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டனர்.

ஒருவர் பொலிஸ் மீட்புக் குழுவால் மீட்கப்பட்டு தங்காலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் மற்ற மாணவனின் உடல் நேற்றுக் காலை மீட்புக் குழுவால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (ஜ)

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் வழமைக்குத் திரும்பியது 2வது மின்பிறப்பாக்கி

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் இரண்டாவது மின் பிறப்பாக்கி நேற்றுக்காலை செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

லக்விஜயா மின் நிலையத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது மின் பிறப்பாக்கிகளை இயக்குவதன் மூலம் கிட்டத்தட்ட 600 மெகா வோள்ட் மின்சாரம் தேசிய கட்டத்தில் சேர்க்கப்படும் என்று மின் உற்பத்தி நிலையத்தின் முகாமைத்துவ பொறியியலாளர் இந்திர சிறிகால்லகே தெரிவித்தார். (ஜ)

# வெடி பொருட்கள் மீட்பு



(அம்பாறை)

திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பாவட்டாய் என்னும் பிரதேசத்தில் கடந்த 20 ஆம் திகதி காணி ஒன்றில் புதையுண்டிருந்த ரி-81 மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டு விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் செயலிழக்க செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமாக இருந்த கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் நேற்று முன்தினம் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றினை அடுத்து விமானப் படையினரால் யுத்த காலங்களில் உபயோகிக்கப்பட்ட வெடிபொருள் ஒன்றின் பகுதியும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வெடிபொருளை ஆராய்ந்து உரிய அனுமதியைப் பெற்று செயலிழக்க செய்ய பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)


# கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 4
கி.பா: செவ் 11 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: B.Sc Visual Communication Administrative Officer (India)
எதிர்பார்ப்பு: பட்டதாரி திருமணத்தின் பின் இந்தியாவில் வசிக்க வேண்டும்
தொ.இ: B/7576

பிறப்பு: 1973 இந்து நட்சத்திரம்: சதயம்
கி.பா: செவ் 9 இல் உயரம்:5'8"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. மின் உபகரணம் திருத்துபவர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் சரளமாக பேசுவதில் சற்று சிரமம்
தொ.இ: B/7578

பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: பூரம் 3
கி.பா:சூரி.செவ் 10இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. ஹோட்டலில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: வெளிநாட்டுப் பெண் விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/7580

பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: பூரம் 3
கி.பா: 16 சூரி.செவ் 5 இல் உயரம்: 158 cm
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. சொந்த வியாபாரம்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/7592

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1996 இந்து நட்சத்திரம்: ரோகினி 1
கி.பா: சூரி.செவ் 8 இல் உயரம்: 5'
தகைமை/தொழில்: பல்கலைக்கழக மாணவி
எதிர்பார்ப்பு: தகுந்த அரச உத்தியோகமுள்ள மணமகன்
தொ.இ: G/8972

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 4 - செவ் 11 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: M.B.A (hons) (India)
எதிர்பார்ப்பு: வெளிநாட்டவர் மட்டும்
தொ.இ: G/8977

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: செவ் 2 இல்
தகைமை/தொழில்: HNDA, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார், சொந்த தொழில்
தொ.இ: G/8986

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 37 செவ் 1 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.
எதிர்பார்ப்பு:.வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8990

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை

திருமஞ்சத் திருவிழா



காலம்: 25.08.2020 செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பம்

திருமஞ்சப்பவனி மாலை 5.00 மணி

அனைவரும் வருகைதந்து
சமூக இடைவெளியைப் பின்
பற்றி அம்பாளைத் தரிசித்து
நல்லருள் பெறுவீராக!

நிர்வாக சபை, திருவிழா உபயகாரர்.

(3672)

# கிளிநொச்சியில் இலவச மருத்துவ முகாம்





(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் மருத்துவமுகாம் மாவட்ட செயலகத்தின் திறன் பயிற்சி நிலைய மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

குறித்த மருத்துவ முகாமில் கண்பரிசோதனை சிறுநீரக நோயாளர்களிற்கான பரிசோதனை மற்றும் நோயற்ற வாழ்விற்கான விழிப்புணர்வு கருத்தரங்கு என்பன இடம்பெற்றன.

இதில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5)

# அபிவிருத்திக் குழுக் கூட்டம் தொடர்பான கலந்துரையாடல்

(கண்டாவளை)
கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்று கிளிநொச்சி மாவட்ட செலயகத்தில் இடம்பெற்றது.

பாராளுமன்ற தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில் மாவட்டங்களுக்கான புதிய ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திற்கான ஒருங்கிணைப்புத் தலைவராக நியமிக்கப்பட்ட கடற்றொழிற்றுறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கிணங்க கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் தொடர்பாக முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்று மாவட்ட செயல கத்தில் இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத் தர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலின் போது நிர்வாக கட்டமைப்புடன் தொடர்புடைய விடயங்கள், சமூக அபிவிருத்தி, சமூக நலன் சார்ந்த விடயங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வாழ்வாதார அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. (5-315)

# 8 இலட்சம் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் மீட்பு



(முறிகண்டி)
பூநகரியில் 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரகுற்றிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. பூநகரி அரசபுரம் பகுதியில் வாகனமொன்றை மறித்து சோதனை நடவடிக்கை மேற்கொண்ட போதே மீட்கப்பட்டன.

இதன்போது வாகன சாரதி தப்பிச் சென்றுள்ளார். சந்தேக நபரை கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பூநகரி பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கமைவாக குறித்த விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.(5-100)



மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகையுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர்களான றிசாத் பதியுதீன் மற்றும் முஷர்ரப் முது நபீன் ஆகியோர் நேற்று முன்தினம் ஆயர் இல்லத்தில் சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

# தீயணைப்பு பிரிவினரின் துரித செயற்பாட்டால் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு தடுக்கப்பட்டது



(குருமன்காடு)
வவுனியா கோவிற்குளம் இந்து கல்லூரிக்கு முன்பாகவுள்ள வீடொன்றில் எரிவாயு சிலிண்டரில் கசிவு ஏற்பட்டு சிலிண்டர் தீப்பற்றவிருந்த நிலையில் அதிரடியாகச் செயற்பட்ட தீயணைப்பிரிவினர் நிலமையினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறித்த வீட்டில் தேநீர் வைப்பதற்காக அடுப்பினை பற்ற வைத்து அணைத்த பின் சிறிது நேரத்தில் எரிவாயு சிலிண்டரிலிருந்து கசிவு ஏற்பட்டுள்ளது.

இதனை அவதானித்த வீட்டார் உடனடியாக வீட்டை விட்டு வெளியேறியதுடன் வவுனியா நகரசபை தீயணைப்புப் பிரிவினருக்கும் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்கு அதிரடியாக விரைந்த தீயணைப்புப் பிரிவினர் பாதுகாப்பாக எரிவாயு சிலிண்டரை வெளியே எடுத்து வந்ததுடன் நீரினை ஊற்றி ஏற்படவிருந்த பாரிய அனர்த்தத்தினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (5-250)

# கும்பாபிஷேகம்

(வவுனியா)
வவுனியா கோவிற்குளம் 'அகிலாண்டேஸ்வரம்' அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில் நவ குண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.05 - 7.28 வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி முதல் மறுநாள் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிவரை இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (5)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

(பூநகரி)
பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அரச சேவை ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச செயலாளர் சி.ச.கிருஷ்னேந்திரன் கலந்து கொண்டார்.

இதில் தலைவராக பொன். தில்லைநாதன், உபதலைவராக இரா செல்வராஜா, செயலாளராக மு.எமிலியாம்பிள்ளை, உப செயலாளராக திருமதி.கி.எலிசபெத், பொருளாளராக வி.சண்முகலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (5-84)

# கமக்கார அமைப்புக்களுக்கு காலபோக பயிர்ச் செய்கைக் கூட்டம்

(பூநகரி)
பூநகரி கமநல சேவைப் பிரிவின் எல்லைக்குள் இயங்கும் 20 கமக்கார அமைப்புக்குமான 2020/2021 காலபோக பயிர்ச் செய்கைக் கூட்டங்கள் இன்று 25 ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்தமாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறுமெனவும் சகல பயிர்ச்செய்கையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பூநகரி கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்தில் கிராம உத்தியோகத்தர், காப்புறுதி அலுவலர், விவசாயப் போதனாசிரியர், கால்நடை உத்தியோகத்தர், நெல் சந்தைப்படுத்தும் சபை உத்தியோகத்தர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொள்வர்.

ஞானிமடம் 25 ஆம் திகதி காலை 9 மணி - சனசமூக நிலைய மண்டபம், வாடியடி 25 ஆம் திகதி மு.ப. 10.30 மணி - பொது நோக்கு மண்டபம், பரமன்கிராய் 27 ஆம் திகதி மு.ப. 10 மணி - பொது நோக்கு மண்டபம், ஆலங்கேணி 27 ஆம் திகதி காலை 9 மணி - பொது நோக்கு மண்டபம், செட்டியகுறிச்சி 28 ஆம் திகதி காலை 9 மணி - திகிரி பிள்ளை யார் மண்டபம், கறுக்காய் தீவு 28 மு.ப. 10.30 மணி - பொது நோக்கு மண்டபம், மட்.நா.கிழக்கு 3 ஆம் திகதி காலை 9 மணி - பொது நோக்கு மண்டபம், கொல்லகுறிச்சி 3 ஆம் திகதி மு.ப. 10.30 மணி - பொது நோக்கு மண்டபம், நல்லூர் 4 ஆம் திகதி காலை 9 மணி - பொது நோக்கு மண்டபம், சாமிப்புலம் 4 ஆம் திகதி மு.ப. 10 மணி - பொது நோக்கு மண்டபம், முக்கொம்பன் 4 ஆம் திகதி மு.ப. 11 மணி - பொது நோக்கு மண்டபம், மட்.நா.மேற்கு 7 ஆம் திகதி காலை 9 மணி - முன்பள்ளி மண்டபம், கௌதாரிமுனை 7 ஆம் திகதி மு.ப. 10 மணி முன்பள்ளி மண்டபம், செம்மன்குன்று 8 ஆம் திகதி காலை 9 மணி முன்பள்ளி மண்டபம், பள்ளிக்குடா, சிவபூமி, பிள்ளையார் நகர் 8 ஆம் திகதி மு.ப. 10.30 மணி - கிராமசேவையாளர் அலுவலகம் ஆகிய இடங்களில் நடைபெறும். (5-84)

# தமிழ் மக்களுக்காக போராடிய பிரபாகரனுக்கு பெருந்தோட்ட மக்கள் ஆதரவளிக்கவில்லை

## தேரரின் வாக்குமூலத்தில் வெளிவந்த உண்மை





(கண்டி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் தமிழ் மக்களுக்காகப் போராடிய போதிலும் அவருக்கு பெருந்தோட்டத்துறை மக்கள் ஆதர வளிக்காமையினாலேயே துன்பத்தை அனுபவிக்கின்ற னர் என சஹ்ரான் கூறியதாக கண்டி நெல்லிகல பௌத்த சர்வதேச மத்திய நிலையத்தின் நிறுவுநர் வத்துரு கும் புரே தம்மரத்தன தேரர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னிலையாகிய போதே அவர் மேற்கண்டவாறு வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் 2017ஆம் ஆண்டு நெல்லிகல பௌத்த சர்வதேச மத்திய நிலையத்திற்கு வந்தபோது, சஹ்ரான் கிறிஸ்தவம் மற்றும் பௌத்த மதம் குறித்தும் அதிலுள்ள விசேட கலாசார விழுமியங்கள் தொடர்பாக விவாதித்ததாகவும் அதன் பின்னர் அவர் பாரம்பரிய முஸ்லிம்களுக்கு தலைவர்கள் இல்லை என்று குற்றம் சாட்டியதாகவும் தேரர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழ் மக்களுக்காக போராடிய போதிலும் அவருக்கு பெருந்தோட்டத் துறை ஆதரவளிக்கவில்லை என சஹ்ரான் தெரிவித்ததாக குறிப்பிட்ட தேரர், அவ்வாறு அவர்கள் ஆதரவளித்திருந்தால் பெருந்தோட்ட மக்கள் இன்று பல துன்பங்களை அனுபவிக்க மாட்டார்கள் என கூறியதாகவும் வத்துருகும்புரே தம்மரத்தன தேரர் தெரிவித்துள்ளார். (ஜ-2)

# லண்டனில் இலங்கை இளைஞன் கோரக் கொலை; சூத்திரதாரிகளுக்கு நீதிமன்றம் கொடுத்த தண்டனை

(லண்டன்)

லண்டனில் இலங்கை இளைஞனை கத்தியால் குத்தி கொன்ற சூத்திரதாரிகளுக்கான தண்டனையை நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதன்படி பிரதான சூத்திரதாரிக்கு ஆயுள் தண்டனையும் ஏனையவருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், இலங்கையை பூர்வீகமாக கொண்ட தாசன் டானியல் என்ற இளைஞன் காற்பந்து போட்டி ஒன்றை காண்பதற்காக செல்லும் வழியில் கடந்தாண்டு செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதி லண்டனின் ஹிலிங்ரன் சுரங்க ரயில் நிலையத்தில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

இந்த கொலை சம்பவத்தில் அலெக்ஸானிங் மற்றும் கமிலி ஆகிய இருவர் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வந்த நிலையில் இருவரும் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டது.

இதையடுத்து அலெக்ஸானிங்கிற்கு ஆயுள் தண்டனை விதித்த நீதிபதி குறைந்தபட்சம் அவர் 25 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவிக்க உத்தரவிட்டார்.

இதோடு கமிலிக்கு ஆறரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஜ)

# மரணதண்டனை கைதியின் கட்டுப்பாட்டில் சிறை மருத்துவமனை

(கொழும்பு)


மரணதண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் கட்டுப்பாட்டில் சிறை மருத்துவமனை இருப்பதாக மேஜர் அஜித் பிரசன்னவின் மனைவி சுதர்மிகா விஜரத்ன குற்றம் சாட்டினார்.

சிறை மருத்துவமனை துமிந்த சில்வாவின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், சில மருத்துவர்கள் அவரது விருப்பத்திற்கு ஏற்ப செயற்படுவதாக மருத்துவமனையின் மருத்துவர்கள் தன்னிடம் கூறியதாகவும் அவர் கூறினார்.

துமிந்த சில்வாவைப் பிடிக்காத நோயாளிகளை சிறை மருத்துவமனையில் இருந்து அகற்ற மருத்துவர்கள் கூட நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு அதிகாரிகள் அவரிடம் கோரியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு மற்றும் வழக்கை விசாரித்த நீதிபதி குறித்து ஊடக சந்திப்பை நடத்திய ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் அஜித் பிரசன்ன ஜனவரி 24 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஜ)

# சட்டவிரோத மீன்பிடிக்கு வைத்திருந்த வெடிபொருட்கள் மீட்பு





(கொழும்பு)

திருகோணமலை எரக்கண்டி கடல் பகுதியில் மிதந்து கொண்டிருந்த சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதாக நம்பப்படும் பல வெடிபொருட்கள் கடற்படை மேற்கொண்டுள்ள நடவடிக்கையின் போது மீட்கப்பட்டன.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 16 வாட்டர் ஜெல் குச்சிகள், 8 மின்சாரம் அல்லாத டெட்டனேட்டர்கள் மற்றும் 4, 8 மற்றும் 10 அங்குலங்கள் கொண்ட 7 பாதுகாப்பு உருகி பிரிவுகளையும், தலா 5 அடி நீளமுள்ள ஒரு பாதுகாப்பு உருகலையும் கடற்படை வெடிகுண்டு அகற்றும் குழுவால் பாதுகாப்புக்காக செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மீன்பிடித் தொழிலில் வெடிபொருட்களைப் பயன்படுத்துவதால் மீனவர்களுக்கும் கடல் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க கடற்படை தொடர்ந்து இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும். (ஜ)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

01

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



உள்ளூராட்சி சபைகளினால் வழங்கப்படுகின்ற சேவைகளை தெளிவுபடுத்துகின்றதும் மக்கள் மிக இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையிலும் பல வழிகாட்டி நூல்கள் சர்வதேச அபிவிருத்திக்கான அவுஸ்திரேலிய முகவர் அமைப்பின் (AusAID) உதவியுடன் ஆசியா நிலையத்தினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்பட்டுள்ளன. சில நூல்களுக்கு எச். ஜீ. சி. ஜயதிஸ்ஸ ஆசிரியராக இருந்துள்ளார். அந்நூல்களிருந்தும் வேறு பல கட்டுரைகளிலிருந்தும் தொகுக்கப்பட்டதே இக் கட்டுரையாகும்.

இக் கட்டுரையில் உள்ளூராட்சி நிறுவனத்தின் பணி மற்றும் அதற்குரிய அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ளூராட்சி அமைச்சின் பங்கு எவை, மாகாண சபையின் பங்கு என்ன, மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் பிரதான விடயப் பரப்புக்கள் எவை, மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் மற்றும் மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் உரிய அதிகாரங்களும் பணிப்பொறுப்புகளும் எவை, உள்ளூராட்சி சபை தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பொறுப்புக்கள் எவை, உள்ளூராட்சி சபையினால் நிறுவப்படும் குழுக்களும் அவற்றின் பணிகளும் என்ன, துணை விதிகள் உருவாக்கப்பட வேண்டிய விடயப்பரப்புக்கள் எவை, உள்ளூராட்சி நிறுவனத்தால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் முறைகள், உள்ளூராட்சி நிறுவனத்திற்கு சாத்தியமான வருவாய்கள் எவை, உள்ளூராட்சி சபை நிதியங்களின் உருவாக்கம் போன்றவை அலசப்படுகின்றன.

இலங்கையில் உள்ளூராட்சி மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக நீண்ட வரலாறு ஒன்றுண்டு. இது பற்றி முன்னர் ஒரு கட்டுரையில் அலசப்பட்டது.

அரச கொள்கைக்கிணங்க நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டில் மக்களுக்கு பிரதேச மட்டத்தில் பயனுள்ளவாறு கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதே உள்ளூராட்சி மன்றங்களைத் தாபிப்பதற்கான நோக்கமாகும்.

1987 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகமும் மேற்பார்வையும் மத்திய அரசிடமிருந்து மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஆயினும் உள்ளூராட்சியுடன் தொடர்புடைய கட்டமைப்புகளையும் தேசிய கொள்கைகளையும் தயாரிக்கும் அதிகாரம் மத்திய அரசின் (உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின்) கீழ் தக்க வைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. (படம்- A)

## உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரம் வழங்கல்

படம் -A





### உள்ளூராட்சி மன்றமொன்றின் கடமைகளும் பணிப்பொறுப்புகளும்

பொதுமக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளால் ஆக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் கடமைகளும் பணிப்பொறுப்புகளும் பின்வருமாறு கூறப்படுகிறது.

"சட்டத்தினால் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனும் ஒரு நிர்வாக எல்லைக்குள்ளான பிரதேசமொன்றில் வாழ்கின்ற மற்றும் அப்பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்துள்ள பொதுமக்கள் தொடர்பாக அவ்வதிகாரப் பிரதேசத்தின் பொதுப் பாதைகள், பொதுமக்கள் சுகாதாரம், பொதுப் பாவனைக்குரிய சேவை நிர்வாகம் மற்றும் நிர்வாகம் என்பவற்றினூடாக அச்செயற்பாடுகளைப் பாதுகாத்து மற்றும் விருத்தி செய்து பொதுமக்களது நல்வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்களை உருவாக்கி பேணிப் பாதுகாப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனத்திடமுள்ள வளங்களை வினைத்திறனான விதத்தில் பயன்படுத்துவதும் வழிநடத்துவதும் இவ்வதிகாரப் பிரதேசத்தினது உள்ளூராட்சி மன்றத்தின் கடமையும் பணிப்பொறுப்புமாகும்." (படம்-B)

**ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கும் ஆட்சி நிர்வாகத்தில் மக்கள் சுதந்திரமாகப் பங்கு பற்றுவதற்கும் உள்ளூராட்சி முறை மூலம் வாய்ப்புக் கிடைக்கின்றது.**

**உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படும் பிரதேசம் குறுகியதாக இருப்பதனால் அங்கு வாழும் மக்களின் தேவைகளைக் கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இதன்மூலம் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மக்கள் தமது தேவைகள் குறித்து அவதானத்துடன் இருந்து தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் இதன்மூலம் முடிகிறது.**




மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் அவ்வதிகாரத்திற்குட்பட்ட பிரதேச மக்களுக்கு அவற்றினால் வழங்கப்பட வேண்டிய சேவைகளுக்குத் தேவையான செலவுகளை பெறக்கூடியவாறு வருமான மூலங்கள் உள்ளடக்கிய உள்ளூராட்சி கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இவை தவிர ஏனைய பல சட்டங்கள் ஊடாகவும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு ஏற்ப, வருமானங்களை ஈட்டிக் கொள்வதற்கு சட்டரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனினும் இலங்கையின் பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களால் அச்சபைகளுக்குச் சேர வேண்டிய வருமானம் உரிய விதத்தில் அறவிடப்படாமல் இருப்பதாகவும் இதன் காரணமாக அவ்வுள்ளூராட்சி மன்றங்களின் ஒட்டுமொத்த வருமான நிலுவைத் தொகையின் அளவு பாரியளவில் அதிகரித்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

எனவே அடிப்படை ரீதியாக அவ்வுள்ளூராட்சி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ள கட்டளைச் சட்டங்களின் கீழ் வருமானத்தை உருவாக்கிக் கொள்ளக்கூடிய வருவாய் மூலங்கள் எவை என்பது தொடர்பில் புரிந்துணர்வொன்றை வழங்கும் எதிர்பார்ப்பில் ஆசிய மன்றத்தினூடாக அவுஸ்திரேலிய அரசின் நிதியுதவியின் கீழ் உப தேசிய ஆளுகைத் திட்டத்தினூடாக உள்ளூராட்சி நிர்வாகம் சம்பந்தமாக பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இது பற்றி பின்னர் ஆராயப்படும்.

மாநகரசபை, நகர சபை மற்றும் பிரதேச சபை உள்ளடங்கிய உள்ளூராட்சி நிறுவன கட்டமைப்பு 3 சட்ட தயாரிப்புகள் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது.

அவை:

- மாநகர சபை கட்டளைச் சட்டம் (1947)
- நகர சபை கட்டளைச் சட்டம் (1939)
- பிரதேச சபை சட்டம் (1987)

(தொடரும்...)

## ஏகாதிபத்தியத்தை ஆட்சி முறையாக்க முயற்சித்தால் ஒருபோதும் இடமளியோம்

### பொன்சேகா திட்டவட்டம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பின் மூலம் ஏகாதிபத்திய ஆட்சியை முன்னெடுக்க அரசாங்கம் முயற்சிக்குமாயின் அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. அரசியல்வாதிகள் ஊழல் மோசடிக்கார்களாயின் எவ்வித அரசியலமைப்பு உருவாக்கப்பட்டாலும் அது பயனற்றதாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா தெரிவித்தார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது இதனைக் கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை முழுமையாக நீக்கப் போவதில்லை என்று அரச தரப்பு தெரிவித்துள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்கள் நீக்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் இரட்டை குடியுரிமையைக் கொண்டவர்கள் பாராளுமன்றம் செல்ல முடியாது என்ற விடயம் உள்ளிட்ட சிலவற்றில் மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தனிப்பட்ட தேவைக்காகவே இவ்வாறான மாற்றங்களை முன்னெடுக்கின்றனர். 19 ஆம் அரசியலமைப்பு திருத்தத்தில் சில சில குறைபாடுகள் காணப்பட்டன.

அவை நாட்டின் எதிர்காலத்தில் பாரிய பாதகத்தை ஏற்படுத்தும் வகையிலான குறைபாடுகள் அல்ல. சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டிய சில விடயங்களில் குறைபாடுகள் காணப்பட்டன. அவற்றில் திருத்தங்களை மேற்கொள்வார்களாயின் அதற்கு நா்மும் ஆதரவளிப்போம்.

ஆனால் தனியொரு பிரிவினருக்காக மாத்திரம் புதிய அரசியலமைப்பை உருவாக்க. முயற்சிப்பார்களாயின் அதற்கு நாம் ஒருபோதும் ஆதரவளிக்கப் போவதில்லை.

புதிய அரசியலமைப்பின் மூலம் ஏகாதிபத்திய ஆட்சியை முன்னெடுக்க முயன்றால் அதற்கு நாம் கடும் எதிர்ப்பினை வெளியிடுவோம் என அவர் தெரிவித்தார். (ஜ)

# மரண அறிவித்தல்

## திருமதி.குலசேகரம் செல்லம்மா (நயினாதீவு)



மலர்வு 10.03.1919
உதிர்வு 24.08.2020

நயினாதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 21/21 கலாசாலை வீதி 2 ஆம் ஒழுங்கை திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குலசேகரம் செல்லம்மா அவர்கள் தனது 101 ஆவது அகவையில் 24.08.2020 திங்கட்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளாரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதம்-குலசேகரம் (ஓய்வு நிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் சிதம்பரம், பொன்னம்பலம் சின்னம்மா, வைத்திலிங்கம் சொர்ணலிங்கம் (ஓய்வு நிலை ஆசிரியர்), வைத்திலிங்கம் குகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வமலர், ஞானமலர், வசந்தமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஏகாம்பரநாதன் (ஓய்வு நிலை பிரதம எழுதுநர்), இரத்தினசிங்கம், விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சின்னம்மா, நாகம்மா, அன்னப்பிள்ளை, செல்லாச்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சுதமதி மற்றும் சங்கர்-அருள்விழி, யோகர், சேகர்-யசோதரா, சுதாகர்-லோகினி, வசீகரன், மேனஜா-மனோஜ், அனித்தா-மதீசன், இராகுலன்-நீரயா, பிரவீன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சௌமியாசாஜிதன், பிரபா, ஆர்த்தனா, ஆரூரன், சச்சின், அமீலியா, மிலேஸ், றியா, நீறியா, றீனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 25.08.2020 செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தயவுடன் அறியத் தருகின்றோம்.

இல. 21/21 கலாசாலை வீதி,
2 ஆம் ஒழுங்கை திருநெல்வேலி வடக்கு

(3673)

தகவல்:
குடும்பத்தினர்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 02 - 01 - 1965



இறப்பு 29 - 07 - 2020

கடந்த 29.07.2020 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர்.திரு.சர்மா பாஸ்கரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 26.08.2020 காலை 8.00 மணியளவில் சம்பில் துறை தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 28.08.2020 வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தியப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கன்றோம்.

காலையடி,
பண்டத்தரிப்பு.

(C-135)

குடும்பத்தினர்.

### கொரோனா எப்போதும் எம்முடனேயே

## நிலைமை மோசமடைவதற்கு முன்னர் தடுப்பூசியைத் தயார்படுத்த வேண்டும்

### பிரித்தானிய விஞ்ஞானிகள் எச்சரிக்கை

(லண்டன்)

கொவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் இப்போதுள்ள வடிவிலோ அல்லது வேறு விதமாகவோ எப்படி என்றாலும் எம்முடனே இருக்கும். எனவே தடுப்பூசியை குறித்தகால இடைவெளியில் பெற்றுக் கொள்வதே சிறந்த நோய் தடுப்பாகும் என பிரித்தானிய அரசு அவசரகால விஞ்ஞான ஆலோசனைக்குழு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனப் பணிப்பாளர் இரண்டு வருடங்களில் கொரோனாத் தொற்று கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும் எனக் கூறிய நிலையில் பிரித்தானிய அரசு அவசரகால விஞ்ஞான ஆலோசகர் குழு பிரதிநிதி சேர் மார்க் வோல்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது 1918 ஆம் ஆண்டுபோல் அல்லாது மக்கள் தொகை அடர்த்தியும் போக்குவரத்து வசதிகளும் நோய்ப் பரவலை அதிகரிக்கும் என்றும் இது அம்மை நோய் போன்றதல்ல என்றும் உலகளாவிய தடுப்பூசித் திட்டமே.

இந்நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த உதவும் என்றும் சுட்டிக்காட்டினார். (ஜ)

## 2 இலட்சத்து 2 ஆயிரத்து 907 பேருக்கு இதுவரை பி.சி.ஆர்.பரிசோதனைகள்

(கொழும்பு)

நாட்டில் இதுவரையில் 2 இலட்சத்து 2 ஆயிரத்து 907 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொவிட்-19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்மித்த பகுதிகளில் பி.சி.ஆர்.பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு மற்றும் கொரோனா ஒழிப்புக் குழுவிற்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் டி.வி.சாணக்க தெரிவித்துள்ளார். (ஜ)


# பாரதம்

## உலகின் மிக உயரமான பாலம் கட்டும் பணியில் இந்தியா தீவிரம்

(டில்லி)
உலகிலேயே மிக உயர மான ரயில்வே பாலம் கட்டும் பணிகள் ஜம்மு-காஷ்மீரில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

செனாப் நதியின் மீது 359 மீற்றர் உயரத்தில் அமைக்கப் படும் இந்தப் பாலத்தின் கட்டு மானப் பணிகள் எதிர்வரும் ஆண்டுக்குள் நிறைவடையும் எனக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள பொறியியல் வல் லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

அதாவது, ஒன்று புள்ளி 3




கிலோமீற்றர் தூரமும் ஈபிள் கோபுரத்தைவிட 35 மீற்றர் அதிக உயரமும் கொண்ட இந் தப் பாலத்தை அமைக்கும் பணி யில் ஆப்கொன்ஸ் (Afcons) குழுமம் ஈடுபட்டு வருகிறது.

குறித்த ரயில்வே பாலம் கட்டும் பணிகள், பல ஆண்டு களுக்கு முன்னரே நிறைவடை யும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் பல்வேறு காரணங் களினால் இன்னும் நிறைவ டையவில்லை என்பதும் குறிப் பிடத்தக்கது. (2)

## கேளிக்கை... கூட்ட நெரிசல்...

(லீமா)
பெருவில் ஊரடங்கு உத்தரவையும் மீறி நடத்தப்பட்ட கேளிக்கை கொண் டாட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்று, தற்போது பெரு நாட்டி லும் வேகமாகப் பரவி வருகிறது. இதன் காரணமாக அங்கு ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த உத்தரவை மீறி, அந்நாட்டு தலைநகர் லீமாவில் கேளிக்கை கொண்டாட்டம் நடத்தப்பட்டது.

இது தொடர்பான தகவல் பொலிஸா ருக்கு வழங்கப்பட்ட நிலையில், குறித்த கேளிக்கை விடுதியை பொலிஸார் முற்று கையிட்டபோது, கொண்டாட்டத்தில் ஈடுபட் டவர்கள் தப்பிச் செல்ல முற்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தின்போது சுமார் 120 பேரளவில் விடுதியில் இருந்ததாக சர்வ தேச செய்திகள் தெரிவித்துள்ளன.

## இங்கிலாந்தில் இந்திய இளவரசரின் மாளிகை 15.5 மில்லியன் பவுண்டுகளுக்கு விற்பனை

(லண்டன்)
இங்கிலாந்தில் இந்திய இள வரசரின் மாளிகை 15.5 மில் லியன் பவுண்டுகளுக்கு விற்ப னையாகியுள்ளது.

19 ஆம் நூற்றாண்டின் முற் பகுதியில் இந்திய துணை கண் டத்தின் வடமேற்கு பகுதியை ஆட்சி செய்த மன்னர் மகாராஜா ரஞ்சித் சிங்கின் இளைய மக னான துலீப் சிங், பிரிட்டிஷ் ஆட் சிக்கு முன் சீக்கிய பேரரசின் கடைசி மன்னராக இருந்தார்.


பிரிட்டிஷ் ஆட்சியை கைப்ப ற்றியதும் துலீப் சிங் இங்கி லாந்துக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கு 1866 ஆம் ஆண்டு இளவரசர் விக்டர் ஆல்பர்ட் ஜே துலீப் சிங் பிறந்தார். அழகான மற்றும் துணிச்சலான இளவரச ராக அறியப்பட்ட விக்டர் 1898 ஆம் ஆண்டு ஆங்கிலேய சமு தாயத்தைச் சேர்ந்த லேடி அன்னே கோவென்ட்ரியை கலப்பு திருமணம் செய்து கொண் டார்.

அதனைத் தொடர்ந்து இங் கிலாந்து அரசின் சார்பில் புது மண தம்பதியருக்கு லண்டன்லிட் டில் கோல்டன் பகுதியில் பிரமா ண்டமான மாளிகை வழங்கப்ப ட்டது. இளவரசர் விக்டர் சூதா ட்டம், குதிரைப் பந்தயம் போன் றவற்றில் அதிக நாட்டம் கொண் டவராக இருந்ததால் செல்வங் கள் அனைத்தையும் இழந்தார்.

1902 ஆம் ஆண்டில் அவர் திவாலாக அறிவிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து லண்ட னில் உள்ள அவரது ஆடம்பர



மாளிகையை அரசு கைப்பற் றிய நிலையில் இறுதியில் அது தனியார் கைக்குச் சென்றது. கடந்த 2010 ஆம் ஆண்டு இந்த மாளிகை புதுப்பிக்கப்பட்டு நவீன மயமாக்கப்பட்டது. இந்த நிலையில் இந்த மாளிகை அண்மையில் விற்பனைக்கு அறிவிக்கப்பட்டது, பலரும் இந்த மாளிகையை வாங்குவதற்கு போட்டி போட்டனர். இறுதியில் இந்த மாளிகை தற்போது 15.5 மில்லியன் பவுண்டுகளுக்கு விற்பனையாகியுள்ளது. (2)



சீனா புதிய ஆப்டிகல் ரிமோட் சென்சி... முன்தினம் வெற்றிகரமாக விண்ணில் ... வடமேற்கு பகுதியில் உள்ள ஜியுவான் ... இருந்து முற்பகல் 10.27 மணிக்கு சீனா ... ரமாக விண்ணில் ஏவியது.


## குணமடைந்தார் எஸ்.பி.பி.

(சென்னை)
பிரபல பின்னணி பாடகர் எஸ். பி.பாலசுப்பிரமணியம் கொரோனாத் தொற்றில் இரு ந்து குணமடைந்துள்ளார்.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் கொரோனாத் தொற்று பாதிப் பால் சென்னையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். கொரோ னாவுக்குச் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவரது உடல் நிலை திடீரென மோசமடைந் தது.

இது அனைவரையும் அதிர் ச்சிக்குள்ளாக்கியது. எஸ்.பி.பால சுப்பிரமணியம் மீண்டும் நலமு டன் வர வேண்டும் என்று பிரபலங்கள், அவரது ரசிகர்கள் உலகம் முழுவதும் பல்வேறு பிரார்த்தனைகளில் ஈடுபட்ட னர்.

இதனைத்தொடர்ந்து எஸ்.



பி.பியின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அவரது மகன் எஸ்.பி.பி.சரண் தனது சமூகவலைத் தளப் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

தற்போது எனது தந்தை யின் உடல்நிலை சீராக உள் ளது என்று அவரது மகன் பதி விட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (2)

## இன்றைய தேவையை அன்றே கண...

### வைரலாகும் புகைப்படம்

(உரோம்)
கொரோனா வைரஸ் பாதி ப்பு காலகட்டத்தினை 1962 ஆம் ஆண்டிலேயே வால்டர் மொலினோ கணித்திருக்கிறார் எனக் கூறும் புகைப்படம் வைர லாகி வருகிறது.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த காமிக்ஸ் வரைபட கலைஞ ரான வால்டர் மொலினோ 1962 ஆம் ஆண்டு வரைந்த தனிப்பட்ட போக்குவரத்து வாகனங்களை மக்கள் பயன்படுத்துவது போன்ற சித்திரம் சமூக வலைத்தளங்க ளில் தற்சமயம் வைரலாகி வருகிறது.

58 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்ட சித்திரம் தற்போ தைய கொரோனா வைரஸ் பாதிப்பு காலகட்டத்தில் பயன்ப டுத்த வேண்டிய ஒன்றாக நெட் டிசன்கள் பார்க்கின்றனர். அந்த வகையில், பழைய சித்திர த்தை பலர் தங்களின் பேஸ்புக் மற்றும் டுவிட்டரில் பகிர்ந்து வருகின்றனர்.

வைரலாகும் சித்திரத்தில், மக்கள் ஒருவர் பயன்படுத்தக் கூடிய வகையில் கண்ணாடி யால் மூடப்பட்டு இருப்பதை போன்று காட்சியளிக்கும் வாக னங்களில் பயணிப்பது போன்று சித்திரம் வரையப்பட்டுள்ளது.

2020 கொரோனா வைரஸ் பாதிப்பு காலகட்டத்திற்காக பரிந்துரைக்கப்பட வேண்டிய தனிநபர் போக்குவரத்து வாக னங்கள். வால்டர் மொலினோ



எனும் கலைஞர் 1962 டிசெம்பரில் வரை ந்திருக்கிறார் எனும் தலைப்பில் வைரல் சித்திரம் அதிகளவில் பகிரப்பட்டு வருகி றது.

வைரல் பதிவுகளை ஆய்வு செய்ததில், இந்த சித்திரம் 1962 ஆம் ஆண்டில் வெளிவ ந்த லா. டாமினிகா டெல் கொரியர் எனும்

# வெளிநாடு

## ...க்கை கொண்டாட்டம் ...ரிசலில் சிக்கி 13 பேர் பலி

...வையும் ...கோண் ...ல் சிக்கி.

...ரோனா ...நாட்டி ... இதன் ...தரவும்

...தரவை ...மாவில் ...பட்டது. ...லிஸா ...குறித்த ...முற்று ...ஈடுபட் ...ளனர். ...மார் 120 ...க சர்வ ...



இதனால், ஒரே வாசல் வழியாக இவர்கள் வெளியேற முற்பட்டபோது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி ஏற்பட்ட மூச்சுத் திணறலினால் 12 பெண்கள் உள்ளிட்ட 13 பேர் உயிரிழந்துள்ள தோடு, பலர் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். அதேநேரம், பிடிபட்டவர்களிடம் நடத்தப்பட்ட வைத்திய பரிசோதனையில் 15 பேருக்கு கொரோனா வைரஸ் இருப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஊரடங்கு விதிகளை மீறி இரவு கேளிக்கை விடுதி நடத்தியதாக விடுதியின் உரிமையாளர்கள் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதோடு, இதுதொடர்பான விசாரணைகளையும் அந்நாட்டு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## கோமாவில் வடகொரிய ஜனாதிபதி ஆட்சி அதிகாரத்தில் சகோதரி ?

(சியோல்)

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் கோமா நிலையில் இருப்பதால், அவரது சகோதரியான கிம் யோ ஜாங்கிடம் அனைத்து பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.




வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் மன அழுத்தம் காரணமாக தமது சகோதரியிடம் பொறுப்புகள் சிலவற்றை ஒப்படைத்துள்ளதாக வெளியான தகவலை அடுத்து தற்போது அவர் கோமா நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கிம் ஜாங்கின் தற்போதைய நிலை மேலும் நீடித்தால் அது வடகொரியாவுக்கு பேரழிவை ஏற்படுத்தும் என முன்னாள் தென்கொரிய ஜனாதிபதியின் ஆலோசகர் சாங் சோங் மின் வெளிப்படுத்தியுள்ளார். தமக்கு கிடைத்துள்ள தகவலின் அடிப்படையில், கிம் ஜாங் உன் கோமா நிலையில் தான் இருக்கிறார், ஆனால் உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர் இருக்கிறாரா? என்பது உறுதிப்படுத்தப்படவில்லை என்கிறார். மொத்தமாக ஆட்சிப்பொறுப்பை ஒப்படைக்கும் ஒரு தெளிவான திட்டத்தை இதுவரை வடகொரியா உருவாக்கவில்லை.

36 வயதான கிம் ஜாங், இந்த ஆண்டில் இதுவரை சில முறை மட்டுமே, வெளியே ஊடகங்கள் முன்னிலையில் தென்பட்டார். இதனால் கிம் ஜாங் மரணமடைந்துவிட்டார் என்பது போன்ற தகவலும் அவருக்கு மேற்கொண்ட இருதய அறுவைசிகிச்சை சிக்கலில் முடிந்தது எனவும்தகவல் பரப்பப்பட்டது.

ஆனால், தலைநகரில் இருந்து சுமார் 30 மைல்கள் தொலைவில் அமைந்துள்ள சூச்சோன் பகுதியில் கிம் ஜாங் ஒரு தொழிற்சாலை திறப்பு விழாவில் கலந்து கொண்டு மொத்த வதந்திகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)



...ாட் சென்சிங் செயற்கைக் கோளை நேற்று ...விண்ணில் செலுத்தியது. அந்த நாட்டின் ...ஜியுவான் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் ...ரிக்கு சீனா செயற்கைக் கோளை வெற்றிக...

## கலிபோர்னியா காட்டுத்தீ பேரிடராக அறிவிப்பு

**(கலிபோர்னியா)**

**அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பெரும் காட்டுத் தீயை பேரிடர் நிலையாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பிரகடனப்படுத்தியுள்ளார்.**



இம்மாத தொடக்கத்தில் இருந்து வேகமாகப் பரவிவரும் இந்தக் காட்டுத்தீ சுமார் 585 இடங்களில் பரவியுள்ளது. இந்நிலையில் தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் 14 ஆயிரம் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை ஒரு மில்லியன் ஏக்கர் வனப்பகுதி தீக்கிரையாகியுள்ளதுடன் பலத்த காற்று காரணமாக தீ வேகமாக பரவிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் காட்டுத் தீயில் சிக்கி இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் தீயணைப்பு வீரர்கள் உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

மலைப்பாங்கான மற்றும் பலகை குடியிருப்புக்களைக் கொண்ட 3 இடங்களிலேயே பாரிய சேதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## ...கணித்தாரா?



...ல் வரை... ...வைரல்... ...வருகி...

...ய்ததில்,... ...வெளிவ... ...ர எனும் ...

இத்தாலி நாட்டு நாளிதழில் அச்சிடப்பட்டு இருப்பது தெரியவந்துள்ளது. மேலும் இது பெரும் நகரங்களில் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலை குறைக்க வழி செய்ய எதிர்கால கற்பனையில் வரையப்பட்டது எனத் தெரியவந்துள்ளது. (2)

## பெலாரசில் 26 ஆண்டுகள் ஆட்சி; பதவி விலகக்கோரி மக்கள் போராட்டம்

(மின்ஸ்க்)

பெலாரஸ் நாட்டில் 26 ஆண்டுகளாக ஜனாதிபதி பதவியில் உள்ள லூகாஷென்கோ பதவி விலகக்கோரி ஆயிரக்கணக்கான மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒருங்கிணைந்த சோவியத் ரஷ்யாவில் இருந்து 1991 ஆம் ஆண்டு பிரிந்து பெலாரஸ் தனி நாடாக அறிவிக்கப்பட்டது. பெலாரஸ் ஒரு ஐரோப்பிய நாடாகும். அந்நாட்டில் 1994 ஆம் ஆண்டு முதல் முறையாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.



அந்தத் தேர்தலில் அலெக்சாண்டர் லூகாஷென்கோ வெற்றி பெற்றார். அதன்பின் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் அலெக்சாண்டரே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

**இதற்கிடையில், அந்நாட்டில்** கடந்த 9 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலிலும் அலெக்சாண்டர் 80.23 சதவிகித வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றதாக அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இதனால் அலெக்சாண்டர் 6 ஆவது முறையாக ஜனாதிபதியாகத் தேர்தெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.


26 ஆண்டுகளாக ஜனாதிபதியாகச் செயற்பட்டு வரும் அலெக்சாண்டருக்கு எதிராகப் போட்டியிட்ட பிரதான எதிர்க்கட்சித் தலைவரான ஸ்வியாட்லானா சிகானெஸ்கயா 8.9 சதவிகித வாக்குகளை மட்டுமே பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**ஆனால், இந்தத் தேர்தலில்** வெளியான முடிவுகள் மோசடியானவை என எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன.

மேலும், அலெக்சாண்டர் பதவி விலகவேண்டும் எனப் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த போராட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்று ஜனாதிபதி பதவி விலகக்கோரித் தங்கள் கோரிக்கையை விடுத்து வருகின்றனர்.

போராட்டங்கள் நாட்டின் அனைத்துப் பகுதியிலும் நடைபெற்று வருவதால் ஜனாதிபதி அலெக்சாண்டரின் ஆட்சிக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் இந்தப் போராட்டங்கள் வெளிநாட்டுச் சக்திகளினால் நடத்தப்படுவதாக ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பயிற்சி



(கொழும்பு)


ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்த பயிற்சிநெறி இன்று செவ்வாய்க்கிழமை மற்றும் நாளை மறுதினம் பாராளுமன்றத்தின் முதலாவது குழு அறையில் இடம் பெறவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி நெறியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரே மதாஸ மற்றும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பாராளுமன்றத்தின் ஆரம்பகட்ட விடயங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் நோக்கில் இந்த பயிற்சிநெறி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# இரு கார்-ஒரு லொறி மோதல் தந்தையுடன் மகளும் உயிரிழப்பு



(கண்டி)

கண்டி - குருநாகல் பிரதான வீதியின் கொஸ்கொட பகுதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் தந்தையும் மகளும் உயிரிழந்தனர்.

இந்த விபத்தானது நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.


கொள்கலன் லொறியொன்றுடன் காரொன்று மோதியதாகவும், பின்னர். அக்காரானது மேலும் ஒரு கார் மீது கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது இரு கார்களில் பயணித்த ஐந்து பேரும் லொறியின் சாரதியும் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கலகெதர மற்றும் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது இரண்டு வயது சிறுமியும் அவரது தந்தையும் உயிரிழந்துள்ள நிலையில், ஏனையவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் நிலம்பா பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-2)

# 6 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்



(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் ஆறு புதிய கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனால் நாட்டின் தற்போதைய கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 953 ஆக அதிகரித்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து திரும்பிய மூன்று பேரும், மலேசியாவிலிருந்து திரும்பிய இரண்டு பேரும் மற்றும் கென்யாவிலிருந்து வந்த ஒருவருமே இவ்வாறு புதிய கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது நாட்டில் 136 கொரோனாத் தொற்றாளர்கள் சிக்சிசை பெற்று வருகின்றனர். இவர்களுள் இரு வெளிநாட்டினரும் உள்ளடங்குவர்.

கொரோனாத் தொற்று சந்தேகத்தின்பேரில் 55 பேர் வைத்தியக் கண்காணிப்பில் உள்ளனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 2,805 பேர் குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 12 ஆக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தேக அபிமானம்

"ஒருவர் என்னை கன்னாபின்னான்னு திட்டி விட்டான் சேர். அதை நினைத்தால் மிகவும் வருத்தமாயிருக்கு என்று சொல்லி கவலைப்பட்டார் ஒருத்தர். இதிலே கவலைப்படுவதற்கு என்ன இருக்கு? என்றார் ஒரு பெரியவர். அவர் ஒரு மகன்.

"என்ன சேர் இப்படிச் சொல்கின்றீர்கள்? ஒருத்தர் எங்களை பார்த்துத் திட்டினால் வருத்தமாக இருக்காதா?" என்றார் இவர். "அது எப்படி வருத்தமாக இருக்கும்? திட்டுவது என்பது என்ன? அது வெறும் சப்தம் தானே" என்றார் அந்தப் பெரியவர்.

அவருக்குத் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. இருக்காதா பின்ன? நமக்கே அப்படித்தானே தோன்றுகின்றது.

அந்தப் பெரியவர் சொல்வது மிகவும் பெரிய விடயம். அதை நாம் புரிந்து கொள்ள முயற்சி செய்யலாம் என்றால், நடைமுறை வாழ்க்கைக்கு அது ஒத்து வருவது மாதிரி தெரியமாட்டேன் என்கிறது. இருந்தாலும் அந்தப் பெரியவர் அதற்கு என்னதான் விளக்கம் கொடுக்கிறார் என்று பார்ப்போம்.

ஒரு ரயில் போய்க் கொண்டிருக்கின்றது. அதிலே ஒரு சாது ஹரித்துவாரம் போய்க் கொண்டிருக்கின்றார் அவர். ரயிலிலே ஏகப்பட்ட கூட்டம். எங்கள் ஊர் ரயில்... கேட்கவா வேண்டும்.. டிக்கெட் வாங்கிக் கொண்டு பாதிப்பேர்...

அது என்னத்திற்கு. அநாவசியமாக டிக்கெட் என்கின்ற நினைப்பிலே பாதிப் பேர்... இந்தக் கூட்டத்திற்கு மத்தியிலே அந்த சாதுவும் போய்க் கொண்டிருக்கின்றார். உட்காருவதற்காக இருந்த இடத்திலே ஒரு ஆள்படுத்திருந்தான். கொஞ்சம் முரட்டு ஆசாமி. அவன் காலுக்கு அருகிலே கொஞ்சம் இடம் இருந்தது. அந்த இடத்திலே இந்த சாது உட்கார்ந்தார். ஆனால் அந்த ஆள் இரவு முழுவதும் இவரை காலாலே உதைத்துக் கொண்டே இருந்தான். அது இவருக்கு மிகவும் அவமானமாகப்பட்டது. அதனாலே துக்கம் ஏற்பட்டது. இருந்தாலும் அதை ஒரு மாதிரியாக சகித்துக் கொண்டே இவர் வந்து சேர்ந்தார். பொழுது விடிந்தது. அந்த சாது ஹரித்துவார் வந்து சேர்ந்தார். அங்கே ஒரு பெரிய ஞானியை அவர் சந்தித்தார்.

இரவு ரயிலிலே அந்த ஆள் உதைச்சதையும் அதனால் தனக்கு ஏற்பட்ட துக்கத்தையும் இந்த சாது அந்த ஞானியிடம் சொன்னார். சொல்லிவிட்டு... "ஏன் சுவாமி? எனக்குத் துக்கம் ஏற்பட்டதே, அது தவறா?" என்று கேட்டார்.

தவறு தான் என்றார் அந்த ஞானி. "உனக்கு இன்னமும் தேக அபிமானம் போகவில்லை என்பதைத் தான் இது காட்டுகின்றது. அஷ்டாவக்கிரர் என்ன சொல்கின்றார் தெரியுமா? உண்மையான ஞானி, யாராவது தன்னை வந்தனை செய்தால் அதற்காக சந்தோசப்படமாட்டார். யாராவது நிந்தனை செய்தால் அதற்காக வருத்தப்பட மாட்டார் என்று சொல்கிறார்.

நிந்தனை என்பது ஒரு ஒலி தான். தேகாபிமானம் இருக்கின்ற வரைக்கும் இந்த ஒலி நம்மை வேதனைப்படுத்தும். நான் தேகம் இல்லை, ஆத்மா என்னும் நினைவு இருந்தால் இந்த ஒலி நம்மைப் பாதிக்காது. மனு என்ன சொல்கிறார் தெரியுமா? ஒரு சாதகன் பாராட்டுதலை விடம் என்று நினைத்து பயப்பட வேண்டும். அவமானத்தை அமிர்தம் என்று நினைத்து சந்தோசப்பட வேண்டும் என்கின்றார். அவமானப்பட்டால், கவலைப்படாமல் எப்படி இருக்க முடியும்? என்று தான் எங்களுக்கு தோன்றுகின்றது. அதனால் தான் எங்களில் யாரை யும் இதற்கு உதாரணம் காட்ட முடியவில்லை.

புத்தரையும் கபீரையும் உதாரணமாகக் காட்டுகின்றவர்கள் அவர்களுக்கெல்லாம் அவமானம் ஏற்பட்ட பொழுது கவலையேபடவில்லையாம். புத்தரை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காக கௌசாம்பி ராணி, ஓர் இளம் பெண்ணை கொலை செய்து சடலத்தை புத்தர் குடிசைக்கு முன்னால் போடச் சொன்னார். போட்டார்கள். புத்தர் தான் அந்த பெண்ணைக் கெடுத்துக் கொலை செய்துவிட்டார் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் புத்தர் இதைப் பற்றி கவலைப்பட வில்லை. பின்பு உண்மை தெரிந்ததும் புத்தர் புகழ் இன்னமும் அதிகமா கிவிட்டது.

ஒரு பெரிய சபையிலே ஒரு மோசமான பெண் நுழைந்து தனக்கும் கபீருக்கும் சம்பந்தம் உண்டு என்று சொன்னாள். கபீர் கவலைப்பட வில்லை. அவர்கள் மாதிரியெல்லாம் நாமும் இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நிந்தனை-அபகீர்த்தி-அவமானம் எல்லாம் ஆண்டவன் கொடுக்கின்ற பிரசாதம் என்று நினைக்க வேண்டும் என்று சொல்கின்றார் அந்த ஞானி.

இதைக் கேட்ட இந்தக் காலத்து ஆசாமி ஒருத்தர் நான் கூட அப்படித் தான் சேர். யாராவது அவமானப்படுத்தினால் கவலைப்பட மாட்டேன். நேற்றுக் கூட ஒருத்தர் என்னை பளார் என்று அறைந்து விட்டார். நான் கொஞ்சம் கூட கவலைப்படவில்லை... பேசாமல் வந்துவிட்டேன் என்றார் "ஏன் அப்படி வந்துவிட்டீர்கள்?" என்றேன். "அவர் அறைந்ததிலும் ஒரு அர்த்தம் இருந்தது. அதனாலே அப்படி வந்துவிட்டேன்" என்றார். "ஏன் அறைந்தார்?" என்று கேட்டேன். "10 வருடத்திற்கு முன்னர் ஒரு 15 ரூபா அவரிடம் கடன் வாங்கினேன். அதைக் கேட்டுப் பார்த்துவிட்டு கடைசியாக அறைந்தார் என்றார். ஆண்டவனுடைய பிரசாதம் இவருக்கு அடிக்கடி கிடைக்கும் போல் இருக்கின்றது.

# மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்திருப்பதால்

# அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளையும் ஏற்க முடியாது

(கொழும்பு)

**நாட்டை ஒழுங்கான பாதையில் கொண்டு செல்வார் என்ற நம்பிக்கையிலேயே மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு ஆணை வழங்கியுள்ளனர். இந்நிலையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்திருப்பதன் காரணமாக அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது.**



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடனத்தில் அவர் கூறியதைப் போன்ற எந்த நிபுணத்துவம் மிக்க விடயங்களும் உள்ளடக்கப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தைப் பார்க்கையில் அவர் கூறிய எந்த நிபுணத்துவமும் அதில் காண்பதற்கில்லை. இந்தக் கொள்கைத் திட்டம் எதிர்வரும் ஐந்து வருடங்களையும் இலக்கு வைத்த திட்டமாகும்.

இந்நிலையில் கொவிட்-19 வைரஸ் பரவல் காரணமாக நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றது என்பது அனைவரும் அறிந்ததே. அதனை நிவர்த்தி செய்வதற்கான திட்டங்கள் எதுவும் இந்தக் கொள்கை பிரகடனத்தில் உள்ளடக்கப்படவில்லை. இலங்கையை பொறுத்தமட்டில் சுற்றுலாத்துறை ஊடாகவே பெரும் வருமானம் கிடைக்கப் பெறுகின்றது. தற்போதைய சூழ்நிலையில் இதனூடாக ஒரு பில்லியன் டொலராவது கிடைக்கப் பெறுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்நிலையில் இந்த சிக்கலுக்கு எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பிலும் கொள்கை பிரகடனத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

பற்றிக், மட்பாண்ட அமைச்சுகளை விமர்சிக்க நான் விரும்பவில்லை. தேசிய உற்பத்திகளை முன்னேற்ற வேண்டும்தான். ஆனால், இந்த உற்பத்தி பொருட்களுக்கான வரவேற்பு தொடர்பிலும் நாம் சிந்தித்து பார்க்க வேண்டும். வர்த்தக செயற்பாடுகளின் போது சந்தைப்படுத்தல் என்பது மிகமுக்கிய விடயமாகும். இதேவேளை உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்த போது அதன் பயன்களை பெற்றுக் கொள்ள அரசாங்கம் எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லை.

ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகள் எரிபொருள் விலை குறைவடைந்த போது தங்களது நாட்டுக்கு அவசியமாக எரிபொருளை ஒரே தடவையில் பெற்றுக் கொண்டு. எந்த நாட்டிலிருந்து அந்த எரிபொருளை பெற்றுக் கொண்டதோ, அதே நாட்டில் அவற்றை களஞ்சியப்படுத்தி வைத்து தங்களுக்கு அவசியமான அளவை மாத்திரம் நாட்டுக்குள் இறக்குமதி செய்து கொள்கின்றது. இது போன்றதொரு திட்டத்தை அரசாங்கம் செயற்படுத்தியிருந்தால் அதன் பயன்களை நாட்டு மக்களுக்கு பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருந்திருக்கும்.

இதேவேளை இன்றைய காலகட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் என்பது மிகவும் அவசியமானதாக மாறியுள்ளது. கொவிட்- 19 வைரஸ் பரவலின் போது நாடு முடக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் நாம் இணையவழி கல்வியை செயற்படுத்தியிருந்தோம். ஆனால் ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்தில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் எந்தவித திட்டமும் உள்ளடக்கப்படவில்லை. இவ்வாறான சிக்கல்கள் காணப்படுகின்ற நிலையில் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்குவது தொடர்பிலே பெரிதும் பேசி வருகின்றனர்.

அதற்கான தேவையென்ன? தற்போது ராஜபக்ஷக்களின் வசம் 141 நிறுவனங்களின் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதில் பாராளுமன்றத்திலோ, அமைச்சரவையிலோ உறுப்புரிமை பெற்றுக் கொள்ளாமல் இருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவிடம் மாத்திரம் 7 நிறுவனங்களின் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

19 ஆவது திருத்தத்தையும் நீக்கிவிட்டு, பசில் ராஜபக்ஷவை பாராளுமன்றத்திற்கு கொண்டு வருவதற்கே ராஜபக்ஷர்கள் முயற்சிக்கின்றனர். இந்நிலையில் கிடைத்ததை உண்டு வாழ வேண்டிய சூழ்நிலையே மொட்டுவின் ஆதரவாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. தற்போது சிரேஷ்ட பல அரசியல்வாதிகளை திட்டமிட்டு ஓய்வு பெறச் செய்வதற்கான முயற்சிகளும் மொட்டு கட்சிக்குள் இடம்பெற்று வருவதாக தெரிகின்றது. பாராளுமன்ற உறுப்பினர்களான சுசில் பிரேமஜயந்த, டிலான் பெரேரா, டபிள்யூ.டீ.ஜே. செனவிரத்ன மற்றும் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோருக்கு எந்த அமைச்சுப் பொறுப்புகளும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினருக்கு ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் நான் மகிழ்ச்சி கொள்கின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சியை கைப்பற்றிக் கொண்டு, முக்கிய அமைச்சுப் பொறுப்புகளையும் பெற்றுக் கொண்டதுடன், எமது ஆதரவாளர்களுக்கு எந்த செயற்பாடுகளை செய்யவும் அவர்கள் இடமளிக்கவில்லை. தற்போது மொட்டு அணியில் இணைந்து கொண்டிருந்தாலும் முக்கிய அமைச்சுகள் எதுவும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.


தேசிய கலை தொடர்பான இராஜாங்க அமைச்சராக விதுர விக்கிரமநாயக்கவை நியமித்தமையை நான் வரவேற்கின்றேன். இன்று தேசிய கலைகள் அழிந்து கொண்டிருக்கின்றன. அவற்றை முன்னேற்ற வேண்டும். அதேபோன்று நாமல் ராஜபக்ஷவுக்கு விளையாட்டுத் துறை அமைச்சை பெற்றுக் கொடுத்தமை தொடர்பிலும் நாம் வரவேற்கின்றோம். ஆனால் ஒருசில முக்கிய பொறுப்புகளை ஜனாதிபதி கோட்டாபயவின் பிரசார செயற்பாடுகளுக்கு துணைபோன நபர்களுக்கு வழங்கியுள்ளமைதான் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்தார். (ஐ-2)

## ஐ.தே.கவின் தலைமைத்துவம் குறித்து கரு ஜயசூரிய எடுத்த தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தலைமைத்துவத்தை வழங்கும் சவாலை ஏற்க தான் தயாராக உள்ளதாக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கட்சியின் தற்போதைய தலைமைக்கு இது தொடர்பில் அறிவித்துள்ளதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் குறிப்பிட்டுள்ளார்.



தற்போதைய நிலையில் கட்சியில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையினை கருத்திற்கொண்டு, பல்வேறு தரப்பினர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக கட்சியின் மேம்பாட்டிற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கு தலைமைத்துவத்தை வழங்கும் சவாலை பொறுப்பேற்க தன்னால் முடியும் என தற்போதைய கட்சித் தலைமைக்கு மற்றும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளதாக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## இலஞ்சம் மற்றும் ஊழலைக் கையாள்வது குறித்து புதிய சட்டம் - நாமல்

(கொழும்பு)

விளையாட்டுகளில் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுக்கும் விதமாக நவீன முறையில் புதிய சட்டம் காணப்பட வேண்டுமென விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "ஊழல் எதிர்ப்பு மற்றும் இலஞ்சம் தொடர்பான ஏற்பாடுகள் புதிய விளையாட்டுச் சட்டத்தில் பெரிதும் இடம்பெறும்.

மேலும், இந்தச் சட்டத்தை வகுப்பது குறித்து ஆராய ஒரு குழுவை, தேசிய விளையாட்டு சபை நியமிக்கும்.



இந்தக் குழு, விளையாட்டு சபையினால் நியமிக்கப்படும். நாங்கள் அதை நீதி அமைச்சருடன் கலந்துரையாடுவோம். பொதுக்கருத்தும் கோரப்படும்.

அதாவது, சட்டத்தில் என்ன சேர்க்கப்படலாம் என்பது குறித்து பொதுக்கருத்துக்கள் சேகரிக்கப்படும் " என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

51

கலாநிதி முருகர் குணசிங்கம்

எந்த ஓர் இனமும் தமது மொழிப் பாரம்பரியத்தை இழந்துவிடக் கூடாது என்பதற்காகவே அந்நாடுகள் தமது பல்லினக் கலாசாரக் கொள்கையில் பிற மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உள்ளன என்பது வெளிப்படையாகத் தெரிய வருகின்றது.

பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இனங்களின் மொழி பற்றிய பல்வேறு புலமைசார் ஆய்வுக் கட்டுரைகளை ஆழமாக ஆய்வு செய்தபோது அநேகமாக அனைத்து ஆய்வாளர்களுமே ஒரு பொதுவான கருத்தை முன்வைத்து இருக்கின்றனர்.

அதாவது தமது இளம் தலைமுறையினருக்குத் தாய்மொழியில் பேச, எழுத, வாசிக்க உரிய முறையில் பயிற்சி அளிப்பதிலும் ஊக்குவிப்பதிலும் குறுகிய நேரங்களில் மட்டும் அம்மொழிகளைப் பயிற்றுவிக்கும் பாடசாலைகளையும் தனியார் கல்வி நிறுவனங்களைவிட வீடுகளில் பெற்றோர் தமது பிள்ளைகளின் தாய்மொழி வளர்ச்சியில் பெரும் பங்கெடுக்க வேண்டியவர்கள் ஆவார்கள்.

வீட்டில் அதிக நேரம் தமது பிள்ளைகளுடன் இருக்கின்ற பெற்றோர் தமது பிள்ளைகளுடன் தாய்மொழியில் கலந்து உரையாடுவதும் பயிற்சி அளிப்பதன் மூலமே அவர்களைத் தமது தாய்மொழியில் நன்கு தேர்ச்சி பெறச் செய்ய முடியும் என்ற முடிவிற்கு வந்து உள்ளனர்.

மேற்கூறப்பட்ட பின்னணியின் அடிப்படையில் கடந்த 30 ஆண்டுகளாகப் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களின் தமிழ்மொழி தொடர்பான நிலைமைகளையும் செயற்பாடுகளையும் ஆராய்வோம்.

தமிழ்மொழி எந்த அளவிற்கு அவர்களால் பின்பற்றப்படுகிறது? மொழியைப் பேசுவதில் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் என்ன? அம்மொழியைத் தமது இளம் தலைமுறையினருக்குப் பயிற்றுவிப்பதிலும் கையளிப்பதிலும் அவர்கள் சந்திக்கும் சவால்கள் என்ன? என்பதனையும் தமிழ்மொழி எந்த அளவிற்கு அவர்களது முதலாவது இரண்டாவது தலைமுறையினரால் உள்வாங்கி எடுத்துச் செல்லப்படுகிறது என்பதனையும் ஆராய்வதே இப்பகுதியின் நோக்கம் ஆகும்.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களை மொழி அடிப்படையில் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதலாவது பிரிவினர் பிரித்தானியர் இலங்கையில் ஆட்சி செய்த காலத்தில் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலமொழி போதனா மொழியாக நடைமுறையில் இருந்தபோது அம்மொழியில் கல்வி கற்றவர்கள். மற்றவர்கள் தமிழ் மொழியைப் போதனா மொழியாகக்கொண்டு கல்வி கற்றவர்கள். இலங்கை விடுதலை பெற்ற பின்னருங்கூட 1960 ஆம் ஆண்டுகள் வரையிலும் ஆங்கில மொழியைப் போதனா மொழியாகக் கொண்ட பாடசாலைகள் தொடந்து இயங்கி வந்தன.

ஆனால் 1960களில் இலங்கை அரசு சுயபாசை மொழித் திட்டத்தை அறிமுகப் படுத்தியது. பல்கலைக்கழகம் வரையிலும் சுயபாசை நடைமுறைப்படுத்தப் பட்டது.

1960 ஆம் ஆண்டு வரை ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றவர்கள் ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்பட்டனர்.

புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களுள் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றவர்கள் ஒரு பிரிவாகவும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அவர்களது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் ஆங்கில மொழியைக் கூடுதலாகப் பயன்படுத்துவதாகவும் காணப்படுகின்றனர்.

மறுபுறத்தில் தமிழ் மொழிப் பாடசாலைகளில் தமிழ் மொழியில் பயிற்றப்பட்டவர்களும் 1960 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ் மொழியிலேயே பயிற்றப்பட்ட ஈழத்தமிழர்களும் இரண்டாவது பிரிவினராகப் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் பெரும்பாலும் தமது வீடுகளில் தமிழ் மொழியிலேயே பேசுகிறார்கள். ஆனால் தமிழ் மூலம் கல்வி கற்றவர்கள் எல்லோரும் தமிழ் மொழியைப் பின்பற்றுகின்றார்களா? அவர்கள் பிள்ளைகளுடன் தமிழில் பேசுகின்றார்களா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

எனவே இவ்விரு பிரிவினர்களின் மத்தியில் தமிழ் மொழி எத்தகைய நிலைமையில் இருக்கின்றது என்பதனைத் தொடர்ந்து நோக்குவோம்.

இப்பகுதியில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சகல நாடுகளும் தமிழ் மொழியைப் பொறுத்து ஒரு பொதுவான நோக்கில் ஆய்வு செய்யப்படும்.

அதேவேளையில் ஆங்கில மொழி நடைமுறையில் உள்ள நாடுகளில் அவுஸ்திரேலியாவும் கனடாவும் ஆங்கில மொழி நடைமுறையில் இல்லாத நாடுகளில் மலேசியாவும் ஜேர்மனியும் சற்று ஆழமாக ஆய்வு செய்யப்படும்.

தேவை ஏற்படும்போது வேறு சில நாடுகளில் உள்ள நிலைமைகள் பற்றியும் கருத்திற் கொள்ளப்படும்.

மலேசியத் தீவகற்பத்தில் உள்ள ஈழத் தமிழர்களின் தமிழ் மொழிச் செயற்பாடுகள் பற்றி சற்றுச் சுருக்கமாகப் பார்க்க வேண்டிய ஒரு தேவை உள்ளது.

காரணம் சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக ஈழத்தமிழர்கள் அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ் மொழி சார்ந்த அவர்களது நிலைப்பாடுகளையும் நடைமுறைகளையும் அணுகி ஆராயும்போது ஏனைய நாடுகளில் உள்ள ஈழத்தமிழர்களின் எதிர்கால நிலைப்பாட்டினைப் பற்றிய ஆய்வுக்கு உதவியாக அமையும்.

தமிழ் நாட்டில் வாழும் ஈழத்தமிழர்களுக்குத் தமிழ் மொழி பற்றிய பிரச்சினைகள் எதுவும் இருக்க முடியாது என்பது வெளிப்படை.



கோலாலம்பூர் விவேகானந்தா மேல்நிலைப்பள்ளி

அங்குள்ள அனைவரும் தமிழில் பேசி, தமிழில் எழுதி அவர்களது தாயகத்தில் இருப்பது போலவே இயங்கிட முடியும்.

ஆனால் அவர்களின் பேச்சு வழக்குத் தமிழ் நாட்டுத் தமிழர்கள் பேசுகின்ற பேச்சு வழக்கிற்கு ஓரளவு மாறி இருப்பதையே அவதானிக்க முடிகிறது.

குறிப்பாக சென்னையில் வாழும் தமிழ்நாட்டுத் தமிழர்கள் ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுவதுபோல் சென்னையில் வாழுகின்ற ஈழத்தமிழர்களும் ஆங்கிலச் சொற்களைக் கூடுதலாகப் பயன்படுத்துவதைக் காண முடிகிறது.

மலேசியத் தீபகற்பத்திலும் சிங்கப்பூரிலும் உள்ள ஈழத்தமிழர்களுள் நடுத்தர, வயது முதிர்ந்தவர்கள் இன்றும் தமிழில் பேசுகிறார்கள்.

அவர்கள் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இளம் தலைமுறையினருள் கணிசமான தொகையினர் ஆங்கிலம் கலந்து பேசுகிறார்கள்.

இருப்பினும் ஒட்டுமொத்தமாகப் பெரும்பான்மையினர் தமிழிலேயே பேசி வருகின்றார்கள்.

மலேசியத் தீபகற்பத்தில் தமிழ் மொழியின் நிலைமை பற்றி அறிய மலேசியப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் தெய்வேந்திரனை நேர்காணல் செய்தபோது அவர் கீழ்க் கண்டவாறு தனது தகவல்களைப் பரிமாறிக் கொண்டார்.

மலேசியா, சிங்கப்பூரில் உள்ள அரச பாடசாலைகளில் தமிழ் மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

அங்குள்ள கோயில் வளாகங்களிலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. சில அரச பாடசாலைகளில் முழுவதுமாகத் தமிழ் மொழியே போதனை மொழியாக உள்ளது.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிராமங்களில் முழுக்க முழுக்கத் தமிழ் மொழியிலே போதிக்கப்படுகின்றது.

மலேசியப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்த் துறை உள்ளது. அங்கு பட்டப் படிப்பு வரை தமிழ் மொழிப் பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன.

ஏனைய மலேசியப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் படிக்கும் வாய்ப்புகள் உண்டு. எனவே தமிழ் மொழி கற்கும் மாணவர்கள் தொகை குறைந்து விட்டதாகச் சொல்ல முடியாது. தமிழர் இருக்கும் மட்டும் தமிழ் மொழி வாழும்.

கோலாலம்பூரில் உள்ள விவேகானந்தா மேல்நிலைப்பள்ளித் தமிழ் ஆசிரியர் சண்முகநாதன் என்பவரை நேர்காணல் செய்தபோது, அவர் மலேசியத் தீபகற்பத்தில் தமிழ் போதிக்கப்படுவது பற்றிய பல தகவல்களை வழங்கினார்.

மலேசியத் தீவகற்பத்தில் சுமார் 523 தமிழ்ப் பாடசாலைகள் உள்ளன. சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் தமிழ் பயின்று வருகின்றனர்.

இவர்களுள் ஈழத்தமிழர்கள் எத்தனை பேர் என்று கணக்கெடுக்க முடியாது. அவர்களது எண்ணிக்கை மிகவும் குறைவுதான்.

தமிழ்ப் பள்ளிகளில் ஆங்கிலமும் மலாய் மொழியும் கட்டாயப் பாடங்களாக இருக்கின்றன. மேற்கண்ட 523 தமிழ்ப் பாடசாலைகளிலும் ஆரம்பக் கல்விக்கான வயது 7-12 இற்கு இடைப்பட்டதாகவும் இடைநிலைப்பள்ளி 13-18 வயதுக்கு உட்பட்டதாகவும் இருக்கின்றது.

ஏனைய அரச பாடசாலைகளில் மலாய் மொழியே போதனை மொழியாக இருக்கும். அங்கும் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படும். 15 வயதிற்கு மேற்பட்ட தமிழ் பிள்ளைகள் ஓர் அரச பாடசாலையில் இருந்தால் அவர்களுக்குக் கட்டாயமாகத் தமிழ் மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்பது மலேசிய அரசின் சட்டம் ஆகும். (தொடரும்)

# செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி பட்டதாரிகள் பயிற்சியில் இணைத்துக் கொள்ளப்படுவர்

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் அவர்களை பயிற்சியாளர்களாக அரச நிறுவனங்களில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

இதற்கான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக அரச சேவை மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்தலின் போது அளித்த வாக்குறுதிக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். தனது அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

தமது அரசாங்கம் பெப்ரவரி மாதம் இந்த வேலைத் திட்டத்திற்காக பட்டதாரிகளிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

2019 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அன்று பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவர்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர் ஊடாக இவர்களுக்குரிய நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் அனைவரதும் விபரங்களை அதிகாரிகள் பூர்த்தி செய்திருப்பதாகவும் தெரிவித்தார். (ஐ)

## தற்கொலைக்குண்டுத் தாக்குதல் 12 பேர் பலி; 34 பேர் காயம்

(மணிலா)

தெற்கு பிலிப்பைன்ஸ் நகரமான ஜோலோவில் பெண் தற்கொலை குண்டுதாரி ஒருவர் நடத்தியதாகக் கூறப்படும் வெடிப்பு சம்பவத்தில் குண்டுதாரி உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் இந்தச் சம்பவத்தில் 34 பேர் காயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு இராணுவ அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நாட்டின் தென்கிழக்கு மாகாணங்களில் ஒன்றான ஜோலோவின் தலைநகரில் திங்களன்று சுமார் பிற்பகல் **(04:00 GMT)** இந்த வெடிப்பு ஏற்பட்டதாக பிலிப்பைன்ஸ் செஞ்சிலுவை சங்கத் தலைவர் ரிச்சர்ட் கார்டன் தெரிவித்தார்.

ஜோலோவில் உள்ள செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் குண்டுவெடிப்பு நடந்த இடத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், 6 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளதாகவும் 11 காலாட்படைப் பிரிவின் சிவில் இராணுவ உறவுகள் அதிகாரி லெப்டினன்ட் கேணல் ரொனால்ட் மேடியோ, அந்நாட்டு செய்திச் சேவையிடம் உறுதிப்படுத்தியுள்ளார். (ஐ)

## ராஜித மற்றும் ஹேஷ விதானகே ஆகியோருக்கு அழைப்பாணை

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல் சம்பவங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷ விதானகே ஆகியோருக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

அதன்படி எதிர்வரும் செப்டெம்பர் 3 ஆம் திகதி இருவரையும் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.



முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன கடந்த வெள்ளிக்கிழமை அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவில். ஆஜரானார்.

ஜூன் மாதத்தில், அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸங்க சேனாதிபதி வழங்கிய முறைப்பாடு குறித்த விசாரணைக்காகவே ராஜித சேனாரட்ன ஆஜராகியிருந்தார்.

கடந்த ஆட்சியின் போது அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுகள், நீதித்துறை மற்றும் பொலிஸார் மீதான தலையீடு போன்ற குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த வருடம் ஜனவரி மாதத்தில் உயர் அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொரோனா பெருந்தொற்றாக மாறுகிறதா?

உலகமெங்கும் பேரழிவை ஏற்படுத்திவரும் கொவிட்-19 நோயை ஏற்படுத்தும் வைரஸ் தன்னிலை மாற்றமடைந்து வருகிறது. இதனால் தான் நோய்த்தொற்று தீவிரமடைந்து உயிரிழப்புக்கள் அதிகரித்து வருவதாகவும் மற்றும் இவ்வாறான மாற்றங்கள் எதிர்காலத்தில் பயன்பாட்டுக்கு வரும் தடுப்பு மருந்திற்கு அச்சுறுத்தலைத் தருமா? என்பதும் இப்போதுள்ள சவாலாகும் என்பதுடன் தற்போதுள்ள கொரோனா வைரஸின் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு 4614ஜி என பெயரிடப்பட்டுள்ளதுடன் வைரஸின் மேற்புறத்திலுள்ள மனித உடலினுள் நுழைய பயன்படும் "ஸ்பைக்" வகை புரதத்திற்குள் இம்மாற்றம் நடந்துள்ளதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். மேலும் உயிரியல் மாற்றங்கள் அடைந்த வைரஸ்தான் அவற்றை வேகமாக பரவச் செய்கின்றன என்பதற்கு போதுமான சான்றுகள் உள்ளதாகவும் மாற்றமடைந்த வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் பரிசோதனை மாதிரியில் அதிகளவிலான வைரஸ் இருப்பதும் நோயாளிகளுக்கு தீவிர பாதிப்பு ஏற்பட காரணம் என்றும் பேராசிரியர் ஃபாசான் கூறுகிறார்.

உயிரியல் மாற்றமடைந்த புதிய வைரஸ் பாதிப்பு தற்போது சீனா உட்பட பல நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது என்றும் இது மக்களிடையே பரவுவதில் அதிக பாதிப்பை விட வேகமானதாக இருக்கலாம் என்றும் போராசிரியர் கோர்பா எச்சரிக்கிறார். மேலும் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் நோய்த் தொற்று பாதிப்பு உச்ச நிலையை அடைந்த சமயத்திலிருந்து வைரஸ் மேற்புற புரதமாற்றமான டி614 ஜில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கூறுகிறார். (ஐ)

## பாம்புகளை அழிவடையாமல் பாதுகாக்கும் நபர்

நமது சூழலில் வெவ்வேறு வண்ணாங்கள் மற்றும் பாம்புகளின் வடிவ இனங்கள் சூழலுக்கு சிறப்பு மதிப்பையும் சிறப்பினையும் சேர்க்கின்றன.

ஆனால் இந்த விலங்கு பற்றி நம் சமூகத்தில் நிலவும் பகுத்தறிவற்ற பயம் காரணமாக அந்த விலங்குகளை அழிக்க பலர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், பாம்புகளை பிடித்து பாதுகாப்பான முறையில் விடுவிக்கும் தந்தை மற்றும் மகன் தொடர்பிலான சம்பவம் ஒன்று ஹபரண பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

இவர்கள் நீண்ட காலமாக இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாம்புகளை பாதுகாப்பாக பிடித்து வனப்பகுதிகளில் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதுடன் அதனை பிடிக்கும் முறையை 100 பேருக்கும் அதிமானவர்களுக்கு கற்றுக் கொடுத்துள்ளதாக தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கை அரசின் புதிய அரசியலமைப்பு தீர்மானத்தால் 13 ஐ உறுதிப்படுத்துவதில் இந்தியாவுக்கு தர்மசங்கடம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கவுள்ளதாக தீர்மானித்து உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள நிலையில், 13 ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை நீண்ட காலமாகக் கொண்டிருக்கும் இந்தியாவுக்கு தர்மசங்கடமான நிலைமைகள் ஏற்பட்டுள்ளமை கொழும்பில் உள்ள உயர்ஸ்தானிகராலயத்தில் சூட்சுமமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படாது தனியே 13 ஆவது திருத்தச்சட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் விளைந்தால் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் அதில் தலையீடுகளை செய்ய அதிக வாய்ப்புக்கள் இருப்பதாகவும் இந்திய தரப்பில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், ராஜபக்ஷவினர் தலைமையிலான ஆட்சிக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை மக்கள் ஆணை கிடைத்துள்ள நிலையில் புதிய அரசியலமைப்பு செயற்பாடுகளில் இந்தியா செல்வாக்குச் செலுத்த விளைவதானது பிறிதொரு நாட்டின் இறைமை மற்றும் உள்ளக விடயத்தில் தலையீடுகளை செய்வது போன்றாகிவிடும் என்ற கரிசனையை இந்தியா கொண்டிருக்கின்றது.

இந்த கரிசனை காரணமாக இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள குழப்பத்தால் ஆகக்குறைந்தது 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான உள்ளடக்கத்தினையாவது புதிய அரசியலமைப்பிற்குள் உள்ளீர்ப்பது பற்றிய விடயத்தில் அதிக சிரத்தை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

நடைபெற்று நிறைவடைந்த பாராளுமன்றத் தேர்தலின் போதும் அதன் பின்னரும், 13 ஆவது, 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது பற்றி அதிகளவு பேசப்பட்டு வந்த நிலையில் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் 19 ஆவது நீக்கப்பட்டு 20 ஆவது திருத்தம் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்றும் ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற அடிப்படையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் அதிகாரிகளை சந்தித்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி உள்ளிட்ட தமிழ்த் தரப்புக்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்தி மாகாண சபை முறைமையை பாதுகாக்குமாறு வலியுறுத்தல்களை செய்து வருகின்றன.

இத்தகையதொரு பின்னணியிலேயே தமிழ்த் தரப்பொன்றை சந்தித்த வேளையில் கொழும்பில் உள்ள உயர்ஸ்தானிகராலயத்தால் மேற்கண்ட விடயம் சூட்சுமமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிற நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# கொரோனா ஏற்பட்டால் உயிரிழக்கும் அபாயம்

## வைத்திய நிபுணர் சுதத் சமரவீர எச்சரிக்கை



(கொழும்பு)

**தொற்றுநோயற்ற அல்லது பிற நோய்களால் பாதிக்கப் பட்டவர்கள் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டால் அவர்கள் உயிரிழக்கும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

தொற்று நோயியல் பிரிவின் தலைமை நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர இதனை தெரிவித்துள்ளதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உலகம் முழுவதும் ஏற்பட்ட கொரோனா உயிரிழப்புகளில் கவனம் செலுத்தும் போது இந்த இயல்பு மிகவும் தெளிவாக தெரிவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கொழும்பில் உள்ள ஐ.டி.எச். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நிலையில், கொரோனாத் தொற்றினால் உயிரிழந்த பெண்ணின் இறுதி சடங்குகள் நேற்று முன்தினம் இடம் பெற்றன. (ஐ)

# எனது ஹோட்டலுக்காகவா சிங்கராஜவனத்திற்கூடாக வீதி?

## சுற்றுச்சூழல் ஆர்வலருக்கு எதிராக யோஷித சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

சிங்கராஜ வனத்தை ஊடறுத்து அமைக்கப்பட்ட வீதி, தனக்கு சொந்தமான ஹோட்டலிற்காக அமைக்கப்பட்டது என்ற தகவலை வெளியிட்ட சூழலியல் ஆர்வலர் சஞ்சீவ சமிகரவுக்கு சட்டத்தரணி ஊடாக யோஷித ராஜபக்ஷ கடிதம் அனுப்பியுள்ளார்.

சிங்கராஜ வனப்பகுதியில் அமைந்துள்ள யோஷித ராஜபக்ஷவுக்கு சொந்தமான ஹோட்டலுக்காகவே, சிங்கராஜ வனப் பகுதி வழியாக சர்ச்சைக்குரிய வீதித் திட்டத்தை இராணுவம் நிர்மாணிப்பதாக சுற்றுச்சூழல் ஆர்வலர் சமிகர குற்றச்சாட்டுகளை எழுப்பியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த ராஜபக்ஷ, பிரதான வீதியையும், சிங்கராஜவனப் பகுதியில் அமைந்துள்ள தனக்குச் சொந்தமான ஹோட்டலையும் இணைக்க சர்ச்சைக்குரிய வீதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகக் கூறப்படுவதை மறுத்தார்.

பொய்யான குற்றச்சாட்டுகள் தொடர்பாக சுற்றுச்சூழல் ஆர்வலர் சமிகர மீது சட்ட நடவடிக்கை எடுப்பேன் என்று கூறிய யோஷித ராஜபக்ஷ, இது தொடர்பாக சட்டத்தரணி ஊடாக கடிதத்தை அனுப்பியுள்ளார்.


தன் மீதான குற்றச்சாட்டுக்களை 7 நாட்களிற்குள் மீளப்பெற வேண்டும், அதைச் செய்ய தவறினால் 500 மில்லியன் மான நட்ட வழக்கு தொடர்வேன் எனச் சட்ட நிறுவனம் மூலம் அறிவித்துள்ளார்.

இதுபோன்ற குற்றச்சாட்டுகள் மூலம் சில குழுக்கள் அவர் குறித்த பிம்பத்தை கெடுக்க முயற்சிப்பதாக யோஷித ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பினால் (யுனெஸ்கோ) உலக பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டுள்ள சிங்கராஜவனப் பகுதி வழியாக இந்த வீதித் திட்டம் அமைக்கப்பட்டு வருவதால் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்தனர். (ஐ)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2095

### ரதி




நீங்கள் விரும்பிய அனைத்தும் உங்களுக்கு தேவையான நேரத்தில் உங்களை வந்தடையும்... நம்பிக்கையை மட்டும் இழக்காதீர்...

### கனி



வாழ்க்கையை
வெறுக்க ஆயிரம்
காரணம்
இருந்தாலும்...
வாழ்வதற்கான
ஒரே காரணம்...
நாளை எல்லாம்
சரியாகி விடும்...
என்ற நம்பிக்கை
மட்டும் தான்...

### பிரவின்




### பவானி

பார்ப்பவன் என்ன
நினைப்பான்
என்று பயத்துடன்
வாழாதீர்கள்...
படைத்தவன்
என்ன
நினைப்பான்
என்று பயந்து
வாழுங்கள்..!



### கோகுலன்



கஷ்டம் என தெரிந்தும் இஷ்டப்பட்ட ஆண்களுடன் மகிழ்ச்சியாக வாழும் பெண்களே... உலகின் நிஜ தேவதைகள்...!!

### ராகுலன்





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மட்டக்களப்பில் கடும் வறட்சி

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது கடும் வறட்சியுடன் கூடிய கால நிலை நிலவி வருகின்றது. இதனால் மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதியில் அமைந் துள்ள பெரும்பாலான கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றதாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக நீர்த் தாங்கிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் தமக்கு போதுமானதாக இல்லை எனவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.




இந்நிலையில் மனிதர்களுக்கு மாத்திரமின்றி குடிநீருக்காக கால்நடைகள் அலைந்து திரிவதையும் அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வேளாண்மைச் செய்கைக்கு நீர் வழங்குகின்ற பிரதான குளங்களின் நீர்மட்டமும் குறைந்துள்ளன.

இவற்றைவிட பொறுகாமம் கோவில்போரதீவு, பெரியபோரதீவு, வெல்லாவெளி, பழுகாமம், மற்றும் களுதாவளை, களுவாஞ்சிக்குடி, மகிழூர் போன்ற பல பகுதிகளில் அமைந்துள்ள சிறிய குளங்கள் அனைத்தும் முற்றாக வற்றியுள்ளன. (ஐ-2)

# ஆன்மீகம்



## அர்த்தமுள்ள சோதனைகள், ஆண்டவனின் போதனைகள்!

(நேற்றைய தொடர்ச்சி)

புலிகள் வாழும் அதே காட்டில்தான் புள்ளிமான்களும் வாழ்கின்றன. பூனைகள் வாழும் வீடுகளில்தான் எலிகளும் குடித்தனம் நடத்துகின்றன. சுறா மீன்கள் வாலைச் சுழற்றும் கடலில்தான் சிறுமீன்களும் நீந்திச் சுற்றுகின்றன. பாம்புகள் வாழும் வயல்களில்தான் தத்திச் செல்லும் தவளைகளும் இருக்கின்றன. 'போராடி ஜெயிப்பதுதான் வாழ்க்கை' என்பதை உயிரினங்கள் கூட அல்லவா நமக்கு உணர்த்துகின்றன!

விவசாயி ஒருவன் கடவுளிடம் ஒரு நாள் விவாதம் செய்தான். ''கஷ்டப்பட்டு நான் பயிரிடுகிறேன். அமோக விளைச்சல் பெற அன்றாடம் பாடுபடுகிறேன். நீ என்னடா என்றால் திடீரென்று பேய் மழையைத் தருகின்றாய்! வேண்டாத சமயத்தில் வீசுகின்றாய் காற்றை! வீணான போதுகளில் வெப்பத்தைக் கொடுக்கின்றாய்! என் பொறுப்பில் காற்று, மழை, வெயில் இருந்தால் நான் எண்ணியதைச் சாதிப்பேன்'' என்றான். விவசாயியின் கோரிக்கைக்கு மனமிரங்கி கடவுள் சொன்னார் ''சரி! இம்முறை விளைச்சலில் நான் தலையிடமாட்டேன்! உன் கட்டளையை ஏற்று காற்று வீசும், மழை பெய்யும், வெயில் வரும், போகும்! சரிதானே?'' என்றார்.

''மிக மிக சந்தோஷம்'' என்ற விவசாயி ஏற்ற நேரத்தில் உழுதான்! விதை தூவினான்! இயற்கையே அவன் கையில் இயங்கியதால் தேவையான சமயத்தில் மழையை, வெப்பத்தை, காற்றை வரச் செய்தான்! அவன் இச்சை நிறைவேறியது! பச்சைப் பசேல் என்று கண்ணுக்கு விருந்தாக அவன் கழனி காட்சியளித்தது. அறுவடைப் பருவம் வரவே பயிர்களை அறுத்து கட்டுக் கட்ட எண்ணினான். நம் கட்டுப்பாட்டில் அனைத்தும் அமைந்ததால் உருண்டும், திரண்டும் தானியம் விளைந்திருக்கும் என்று மகிழ்ந்தபடி ஒரு கதிரைப் பிரித்துப் பார்த்தான்! அதிர்ந்தே போனான் விவசாயி.

காரணம் கதிருக்குள் நெல் மணியையே காணோம். இன்னொரு கதிர், இன்னொரு கதிர் என பல கதிர்களைப் பிரித்துப் பார்த்தான். ஒரு கதிருக்குள்ளும் தானியம் உருவாகவே இல்லை. பதர்களாக கதிர்கள் எல்லாம் மாறியிருப்பது ஏன் என்று பதை பதைத்தான். ''இறைவா! ஏற்ற முறையில் இயற்கையை இயக்கி மழை, வெயில், காற்றை வரச் செய்தேனே. ஏன் இந்த சோதனை?'' என்றான். புன்னகை புரிந்தபடியே கடவுள் சொன்னார். ''என் கட்டுப்பாட்டில் இயற்கை இயங்கியபோது ஏன் காற்று வேகமாக வீசியது தெரியுமா? உஷ்ணம் ஏன் உச்ச நிலைக்குச் சென்றது தெரியுமா?

வேகக்காற்று வீசினால்தான் பயிர் தன் வேர்களை பூமிக்குள் ஆழமாக இறக்கி வலுப்பெறும். வெப்பம் அதிகமானால்தான் தண்ணீரைத் தேடி நாலாபுறமும் வேர்கள் செல்லும். இதமாகவும், பதமாகவும் நீ இயற்கையை இயங்கச் செய்ததால் உன் பயிர்கள் ஊட்டம் அடையவில்லை. தள தளவென்று வளர்ந்ததே தவிர தானியத்தைத் தரும் தகுதி அதற்கு ஏற்படவில்லை.'' விளக்கம் அறிந்த விவசாயி கடவுளை விழுந்து கும்பிட்டார்! சோதனைகளும் துன்பங்களும் எதற்காக வருகின்றன என்கின்ற போத-னையை கடவுள் அவன் மூலம் நமக்கும் கற்றுக் கொடுத்து விட்டார் அல்லவா!

# செய்தித்துளிகள்

## மதூஷின் சகா கைது

(கொழும்பு)

தற்போது சிறைக்காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் கடத்தல்காரரான மாகந்துரே மதூஷின் நெருங்கிய நண்பர் என சந்தேகிக்கப்படும் "படகோட பூசியா" எனப்படும் பாதாள குழு உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை 18 கிராம் ஹெரோயினுடன் களுத்துறை பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார். 34 வயதான சந்தேக நபர் படகோட பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். (ஐ-2)

## 180 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைய பஹ்ரேய்னில் சிக்கித் தவித்த மேலும் 180 இலங்கையர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நாடு திரும்பியுள்ளனர்.

பஹ்ரேய்னிலிருந்து ஶ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்தின் மூலம் அவர்கள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனை முடிவுகள் வெளிவந்தவுடன் அவர்களை முகாம்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## சில சிறைச்சாலைகளின் பாதுகாப்பு எஸ்.ரி.எப்.இன் கீழ்

(கொழும்பு)

நேற்று முதல் வெலிக்கடை, மகசின் சிறைச்சாலையின் மற்றும் கொழும்பு ரிமான்ட் சிறைச்சாலையின் பாதுகாப்பிற்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய இதனைத் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 180 | 200 |
| தக்காளி | 100 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 110 | 110 | 100 |
| கோவா | 130 | 140 | 140 | 160 |
| கரட் | 80 | 160 | 140 | 200 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 100 | 110 | 60 | 100 |
| வாழைக்காய் | 150 | 140 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 60-100 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 150 | 170 | 170 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 100 | 160 |
| பயற்றங்காய் | 160 | 180 | 120 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 90 | 120 |
| கறிமிளகாய் | 350 | 400 | 280 | 400 |
| முருங்கைக்காய் | 160 | 130 | 120 | 120 |
| போஞ்சி | 250 | 340 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | — | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 60 | 30 | 40 |
| தேசிக்காய் | 100 | 160 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 70-80 | 70-90 |
| இராசவள்ளி | — | -- | 300 | — |
| வெங்காயப்பூ | 250 | 200 | 220 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 40 | 80 |




# இரகசிய பூஜை

ஒரு சமயம், விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயருடைய அவைக்கு, நீண்ட ஜடா முடி தரித்த, வாட்ட சாட்டமான ஒரு சந்நியாசி வந்தார்.

வரும்போதே அவர், "அரசே, விஜயநகருக்குப்பெரிய ஆபத்து ஒன்று காத்திருக்கிறது. அதைக்கூறி எச்சரிப்பதற்காக, இமயத்திலிருந்து வருகிறேன்" என்றார்.

அதைக்கேட்டதும், அரசர் சற்றுப்பதற்றம் அடைந்து விட்டார். ஒரு தனியறையில், அரசருடன் ஆலோசனை நடத்தினார் சந்நியாசி.

"அரசே, தலைநகருக்கு வெகுதூரத்தில், காட்டில் ஒரு பழைமையான பங்களா உள்ளது. அங்கு கெட்ட கிரகங்களைக் களைவதற்காக, ஏழு நாட்களுக்கு ஒரு பூஜை செய்யப்போகிறேன்.

ஏழாவது நாள் பூஜைக்கு நீங்கள் தனியாக அங்கு வாருங்கள். எல்லாம் நல்லபடியாக முடியும்..."என்றார் சந்நியாசி.

மறுநாள் முதலே, சந்நியாசியின் பூஜை தொடங்கி விட்டது. ஏழாம் நாள் அரசர் குதிரை மீதேறி அமர்ந்து தனியாக அந்தக்காட்டுப் பங்களாவை நோக்கிச் சென்றார். சந்நியாசி அரசரை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.


அரசரை வரவேற்ற அவர் "அரசே, என்னுடைய காரிய சித்தியின் பெருமையைப் பாருங்கள். நான் உச்சரிக்கும் மந்திரத்தின் ஒலி வெகுதூரம் பரவித் திரும்பக் கேட்கும்" என்றார்.

உண்மை என்னவென்றால், சந்நியாசி, கூறிய ஏதோ ஒரு ரகசிய ஒலி, உரக்கத் திரும்பக் கூறப்பட்டுப் பரவியது. அரசர் திடுக்கிட்டார்.

அதேசமயம், முண்டாசு அணிந்த உயரமான ஒரு மனிதன் உள்ளே வந்து, அரசருக்கு அருகில் அமர்ந்து கொண்டான். அறையில் ஒலித்த சத்தத்தைக் கேட்டு, உரத்தகுரலில், "அடேய்... இதெல்லாம் ரகசியம், பாதாள ரகசியம்..." என்றார்.

அவர் குரல் நின்றதுமே, மந்திரம் ஒலிப்பதும் நின்று விட்டது. சிலர் விரைந்து ஓடும் ஓசை கேட்டது.

அரசருக்கு அதிர்ச்சி. சந்நியாசிக்கு வியர்த்து விட்டது. ஆனால், முண்டாசு மனிதர் மட்டும், அமைதியாக இருந்தார்.



கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, விஜயநகர வீரர்கள் மூன்று பேரைச் சிறைப்பிடித்து அழைத்து வந்தனர்.

அவர்கள் சந்நியாசி வேடத்தில் இருந்த எதிரிகளின் ஒற்றர்கள் வீரர்களைப் பார்த்ததும், சந்நியாசி ஓடினார். ஆனால், அவரும் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

அப்போது முண்டாசு மனிதர் தனது முண்டாசைக் களைந்தார். அவரைக் கண்டு அரசர் திடுக்கிட்டார்... அருகில் தெனாலிராமன் "செல்லுங்கள் அரசே விரைவில் இங்கிருந்து போய்விடுவோம்.

கீழே சுரங்கத்தில் வெடி வைக்கப்பட்டுள்ளது. அதை வெடிக்கச்செய்து இந்தப் பங்களாவைச் சிதறடிக்க வேண்டும் என்பது சந்நியாசியின் திட்டம்.

மறைந்து கொண்டு மந்திரத்தைச் திரும்பச் சொன்னவன், அவன் தான். எனக்கு ஆரம்பம் முதலே, சந்தேகம் தான். இப்போது பிடிபட்டு விட்டனர்.." என்று தெனாலிராமன் சொன்னதும் தான், அரசருக்குத் தனது தவறு புரிந்தது.

"உண்மைதான் தெனாலிராமா, நீ சரியான நேரத்தில் வந்தாய்... இல்லாவிட்டால், என்ன நடந்திருக்குமோ? நினைக்கவே நடுங்குகிறது..." என்ற அரசர் தெனாலிராமனை வாரி அணைத்துக் கொண்டார்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## இலங்கையில் பறந்த புலிக்கொடி!

47


கொடுங்களூர்

பிற மன்னர்க்ள் , தாம் வென்ற நாடுகளுடன் தங்களால் தோற்கடிக்கப்பட்ட மன்னர்களின் பெயர்களையும் கல்வெட்டுக்களில் பொறித்தார்கள். ஆனால், ராஜராஜனின் கல்வெட்டுக்களில் நாடுகளை வென்ற விபரங்கள் மட்டுமே இருக்கும்.

ராஜராஜன் காலத்துக் கல்வெட்டுகளில் இரண்டு இனப்பெயர்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. சிங்களர், செழியர். இங்கும் மன்னர்களின் பெயர்கள் சுட்டிக்காட்டப்படவில்லை.

ராஜராஜன் மன்னர்களை வென்றிருக்கிறார். ஆனால், போருக்குச் சம்பந்தமில்லாத மக்களை அவர் துன்புறுத்தவில்லை.

அவருடைய வீரர்கள் ஏதாவது தவறு செய்தாலும் அதை உடனே தண்டித்துத் தவறுக்குப் பிராயச்சித்தம் தேடுபவராகவே அவர் இருந்தார்.

கைப்பற்றப்பட்ட நாடுகளில் நிலையான ஆட்சியை உருவாக்கி, அங்கும் மக்களுக்குப் பெரும் நலப்பணிகளைச் செய்திருக்கிறார்.சேர நாட்டின் பெரும் ஏரிகள் அவர் வெட்டியவையே.

கேரளப் போரையே எடுத்துக் கொள்வோம். எதனால் அந்தப் போர் தொடங்கியது? சமாதானத்துக்குத் தூதுவரை அனுப்பினார் ராஜராஜன்.

ஆனால், அவர் சிறைப்பட்டதால் கேரளம் தாக்கப்பட்டது. உதகையைத் தீ உய்த்த உரவோன் எனப் பாடுமளவுக்கு அது கடுமையான போர் விதி மீறலுக்கான தண்டனை தான் உதகை எரிப்பு என்றாலும் ராஜராஜனுக்கு இதில் மகிழ்ச்சியில்லை என்பது அவருடைய மெய்கீர்த்திகளில் இருந்து புலப்படுகிறது.

தான் எங்கு படையெடுத்து வென்றாலும் அதைத் தன் மெய்கீர்த்தியில் சேர்த்துக் கொள்ளும் ராஜராஜன் உதகைப் போருக்கு மெய்கீர்த்தியில் இடமே இல்லாமல் பண்ணி விட்டார்.

உதகையின் எதிரொலியில் காந்தளூர்சாலையும் கொல்லமும் கொடுங்களூரும் புலிப்படையின் தாக்குதலுக்கு ஆளாயின.

மைசூர்ப் படையெடுப்புக்கும் ராஜேந்திரசோழனே படைக்குத் தலைமை தாங்கினார். கொல்லத்துக்குச் சென்று அங்கிருந்த சிற்றரசர்களைச் சோழர் படை விரட்டியடித்தது.

அவர்களுக்கு இது கொசு அடிக்கிற வேலைக்குச் சமம். மைசூரின் பெரும்பகுதி கங்கபாடி என்றழைக்கப்படும். அங்கு கங்கர்களின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது.

இந்த நாட்டு மன்னருக்கும் சோழர்கள் என்றாலே வேப்பெண்ணெயாகக் கசக்கும். மைசூரைச் சேர்ந்த தும்கூர், சித்தல், துர்க்கம், கோட்டங்கள், பெங்களூர், கோலார், பெல்லாரிக்கோட்டங்கள் போன்ற பகுதிகளை நுளம்ப பல்லவர்கள் ஆண்டு வந்தார்கள். (தொடரும்)

மனதைப் பொத்தல் குடிசையாக வைத்திருக்க வேண்டாம்; அது, எந்தப் புயலையும் தாங்கும் இரும்புக் கோட்டையாக இருக்கட்டும். – நீட்சே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசியல் சார்ந்த தமிழின ஒற்றுமை சாத்தியமானதா?

பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்றத்தில் தனது கன்னியுரையின் போது இலங்கை மண்ணின் ஆதிக்குடிகளின் மொழி தமிழ் என்பதை மிகத் தெளிவாக – துணிச்சலோடு கூறியதனூடு சிங்கள மக்கள் இலங்கை வரலாற்றை அறிய அரியதொரு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

தவிர, நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனைக் கடுமையாக எதிர்த்தவர்களும் அவரின் கன்னியுரை கண்டு அதிர்ந்துள்ளனர்.

அந்த அதிர்ச்சிக்கு தமது எதிர்வினை வெளிப்பாட்டைக் காட்ட முடியாத சூழ்நிலையில், நீதியரசர் விக்னேஸ்வரன் பாராளுமன்றம் சென்றது தமிழர்களுக்கு நல்லது என்று அவர்கள் நினைக்குமளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

அந்தவகையில் நீதியரசரின் பாராளுமன்ற உரைகள் இன்னும் பல உண்மைகளை வெளிப்படுத்தும்.

இந்த உண்மைகள் சிங்களப் பேரினவாதிகளுக்கு கசப்பாக இருந்தாலும் சிங்கள மக்களும் அவர்கள் தரப்பில் இருக்கக்கூடிய நடுநிலையான வரலாற்று ஆசிரியர்களும் உண்மையை ஏற்றுக் கொள்வர் என நம்பலாம்.

இவை ஒருபுறமிருக்க, நம் கவலையெல்லாம் தமிழ் இனத்தின் ஒற்றுமை பற்றியது தான்.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பாராளுமன்றம் சென்றதன் காரணமாகச் சிங்களப் பேரினவாதிகளின் முகம் கறுத்துவிட்டது.

காரணம் இவர்கள் இருவரும் ஒற்றுமையாக, ஒரே கொள்கையில் தமிழ் மக்களின் நிலைப்பாட்டை தெரிவிப்பதோடு அதில் உறுதியாகவும் இருப்பர்.

இஃது சிங்களத் தரப்புக்கு அவ்வளவு ஆரோக்கியமல்ல என்று பேரினவாதிகள் எண்ணுகின்றனர்.

அவர்கள் நினைப்பது சரியாயினும் இருவரும் ஒற்றுமையாக... என்ற அவர்களின் நினைப்பு யதார்த்தத்துக்குப் பொருந்துமா என்பதுதான் இங்கு கேள்வி.

விகிதாசாரப் பிரதிநிதித்துவம் வந்துவிட்ட பின்னர் நேர்மைக்கும் அறிவாற்றலுக்கும் இடமில்லை என்றாயிற்று.

என்னைவிட அறிவாற்றல் உடையவனைத் தேர்தலில் நிறுத்தினால், அவர் வென்று நான் தோற்றுவிடலாம் என்று நினைக்கின்ற கள நிலைமையில்; வெறும் குற்றச்சாட்டுக்களின் அடுக்குகளில் ஏறி நின்று அரசியல் நடத்துகின்ற சமகால சூழ்நிலையில்,

தமிழ் இனத்தின் ஒற்றுமை என்பது அரசியல் சார்ந்து சாத்தியப்படுமா? என்றால், அதற்கான விடையை ஆம் என்று அவசரமாகக் கூறிவிட முடியாது என்பதே உண்மை.

# சமுர்த்தி நிவாரணத்தை ஏழை மக்களை பலப்படுத்தும் செயற்றிட்டமாக்குங்கள்

## ஜனாதிபதி கோட்டாபய பணிப்புரை

(கொழும்பு)

சமுர்த்தி நிவாரணத்தை நாட்டுக்கு சுமையாவதற்கு இடமளிக்காது குறைந்த வருமானம் பெறும் மக்களை பலப்படுத்தும் செயற்றிட்டமாக மாற்றுங்கள் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளார்.

"குறைந்த வருமானம் பெறுவோருக்கு புதிய வருமான வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதன் மூலமே வறுமை மற்றும் சமூக ஏற்றத்தாழ்வை குறைக்க முடியும். அதனால் வறுமையை ஒழிப்பதற்கு முன்னுரிமை வழங்கி சமுர்த்தி செயற் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்" என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அனைத்து குடும்பங்களினதும் வருமானத்தை அதிகரித்தல், கிராமிய பொருளாதாரத்தின் வளர்ச்சி, மக்கள் மைய பொருளாதாரத்தை மேம்படுத்தல் என்ற விடயங்களை இதற்காக பயன்படுத்திக் கொள்ளலாம்.

சமுர்த்தி, மனைப் பொருளாதார, நுண்நிதி, சுயதொழில், தொழில் அபிவிருத்தி மற்றும் கீழ் உழைப்பு, அரச வளங்கள் அபிவிருத்தி, இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக நேற்று பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சமுர்த்தி வழங்குவதற்காக வருடாந்தம் செலவிடப்படும் தொகை 50 ஆயிரம் மில்லியன் ரூபாய்கள் ஆகும். இந்த தொகை நாட்டுக்கு முதலீடாக வேண்டும். சமுர்த்தி பயனாளிகளை நிவாரணம் பெறும் மனநிலையில் இருந்து மீட்டெடுத்து நுண் தொழில் முயற்சியாளர்கள் என்ற நிலைக்கு மாற்றும் வேலைத் திட்டத்தை உடனடியாக திட்டமிட வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சுட்டிக் காட்டினார். அங்கு உரிய பின்னூட்டலின் அவசியத்தையும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

வலுவூட்டப்பட்ட சமுர்த்தி பயனாளிகளை சமுர்த்தி செயற்திட்டத்தில் உள்வாங்கி நாட்டுக்கு நன்மை கிடைக்கும் வழிமுறை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். நுண்நிதி கடன்கள் மூலம் பிரதிபலனை வழங்குவதற்கு ஒழுங்குபடுத்தல் அவசியம் நிதி இயலுமை குறித்து விளங்கிக் கொள்வது நுண்நிதி நிறுவனங்களின் மிக முக்கிய பணியாகும்.

சமூக மாற்றத்துக்கு மக்கள் மத்தியில் உத்வேகம் தோன்றியிருக்கும் இந்நேரத்தை வீட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கோவிட் 19 போன்ற சவால்மிக்க நிலைக்கு முகங்கொடுத்த மக்களுக்கு தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக வங்கிகள் சலுகை வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, இதன் மூலமே மக்களுக்கும் நாட்டுக்கும் சிறந்த பொருளாதாரத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் மேலும் குறிப்பிட்டார்.

"சமுர்த்தி" நிவாரணத்தை உண்மையாகவே பெறவேண்டியவர்களை இனங்காண்பதன் முக்கியத்துவத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சுட்டிக் காட்டினார். நுண்நிதிக் கடன் பிரச்சினையாக மாறி இருப்பதாகவும், கடன் ஒழுங்குபடுத்தும் அதிகார சட்டம் அல்லது வேறு சட்டங்கள் மூலமோ அதனை கட்டுப்படுத்த வேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் முக்கிய எதிர்பார்ப்பாகிய காணி உரிமையை மக்களுக்கு வழங்குவதை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் பசில் ராஜபக்ச சுட்டிக் காட்டினார்.

தெங்கு, மா, பலா போன்ற பயிர்ச் செய்கைகளை ஆரம்பித்து மனைப் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். வன, ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் உள்ள காணிகளை மீண்டும் பிரதேச செயலகங்களின் கீழ் கொண்டுவந்து மக்களுக்கு உரிய உரிமையை உடனடியாக வழங்குவது பற்றியும் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

பிரதமர் மகிந்த ராஜபக்ச, பசில் ராஜபக்ச, இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் பி.பி ஜயசுந்தர, நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல ஆகியோர் உள்ளிட்ட இராஜாங்க அமைச்சுக்குரிய நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் வங்கி துறையை பிரதிநிதித்துவம் செய்யும் அதன் மூத்த அதிகாரிகள் பலரும் இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ம-3)

## 63 பேர் வீடு திரும்பினர்

(முல்லைத்தீவு)

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பி முல்லைத்தீவு விமானப் படை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த 63 பேர் நேற்று தனிமைப்படுத்தலை நிறைவு செய்து அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டனர். (5)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பணத்தின் உண்மையான மதிப்பு, பிறரிடம் கடன் கேட்கும் போதுதான் தெரியும்.

-பிராங்க்ளின்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மண்கும்பான், மண்கும்பான் விடுதி, தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை, அல்லைப்பிட்டி, வெண்புரவிநகர், பூம்புகார், மண்டைதீவு, மண்டைதீவு கடற்படை முகாம், மண்கும்பான் கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** மகாகச்சக்கொடிய கிர்ாமம், நெளுக்குளத்திலிருந்து இராஜேந்திரகுளம் வரை, கூமாங்குளத்திலிருந்து அவுசதப்பிட்டிய வரை, நித்தியநகர், தவசிக்குளம் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### விதியைப் படைப்பவன் நீதான்



உண்மையான வீரன் மௌனமாக வேலை செய்கிறான். ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னிடம் நம்பிக்கை வைக்கவேண்டும். என்னால் முடியாது என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். நீங்கள் வரம்பில்லா வலிமை பெற்றவர்கள். எதையும் எல்லாவற்றையும் சாதிக்கும் ஆற்றல் படைத்தவர்கள்.

உனக்குப் பயமில்லை என்று நினை. நோயில்லை என்று நினை. கடவுளை வழிபடும் போது மரண தேவன் உன் குடுமியைப் பற்றியிருக்கிறான் என்று நினை. மரணத்தைக் கண்டு கலங்காதே. நீ உன்னைப் பலவீனன் என்று ஒருபோதும் சொல்லாதே. தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்புமுழுவதையும் உன் தோள் மீதே சுமந்து கொள்.

உன் விதியைப் படைப்பவன் நீயே என்பதை அறிந்து கொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளே குடி கொண்டிருக்கின்றன. (தொடரும்)

# இளைஞர் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி கிண்ணத்தை சுவீகரித்தது கோப்பாய் வடக்கு இளைஞர் கழகம்

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப் பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

14 அணிகள் பங்கு பற்றிய குறித்த தொடரின் இறுதிப் போட்டியில் கோப்பாய் வடக்கு இளைஞர் கழக் அணியை எதிர்த்து இருபாலை கிழக்கு இளைஞர் கழக அணி மோதியது.

இப்போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கோப்பாய் வடக்கு இளைஞர் கழக அணி வெற்றி பெற்று 2020 ஆம் ஆண்டுக் கான கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.



## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# ஸ்பைடர் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது பாபா போய்ஸ் அணி




ஆட்டநாயகனாக கோபிநாத்

பருத்தித்துறை ஸ்பைடர் விளையாட்டுக் கழகம் நடத்திய மாபெரும் மென்பந்தாட்ட சுற் றுப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் ஸ்பைடர் விளை யாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் கல்வியங்காடு பாபா போய்ஸ், இணுவில் கலை ஒளி அணி கள் மோதின. 12 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் முத லில் துடுப்பெடுத்தாடிய இணு வில் கலை ஒளி அணி 98 ஓட்டங்களை எடுத்தது.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாபா போய்ஸ் அணி 8 ஓவர்க ளில் வெற்றி இலக்கை அடை ந்து வெற்றியீட்டியது. போட்டி யில் 56 ஓட்டங்களைப் பெற்ற கோபிநாத் ஆட்ட நர்யகனாக தெரிவு செய்யப்பட்டார்.

# நொதேன் பிறீமியர் லீக் 2K 20

## கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டிகள்



- அரியாலை கில்லாடி 100 எதிர் ஊரெழு றோயல்ஸ்
- ஊரெழு றோயல்ஸ் 69
- அரியாலை கில்லாடி100.65
- ஊரெழு றோயல்ஸ் அணி வெற்றி
- ஆட்டநாயகன்-புலேந்திரன் (ஊரெழு றோயல்ஸ்) 4 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்கள்



- யாழ் அரோஸ் அணி எதிர் இனுவில் யுனைட்டட்ஸ்ரார்
- யாழ். அரோஸ் 89/6
- இனுவில் யுனைட்டட்ஸ்ரார் 86/8
- யாழ் அரோஸ் 3 ஓட்டங்களால் வெற்றி
- ஆட்டநாயகன் அமல்ராஜ் 7 ஓட்டங்கள் 3 விக்கெட்



- கொக்குவில் ஸ்ரார் எதிர் யப்னா கிங் கோப்ராஸ்
- கொக்குவில் ஸ்ரார் 85/8
- யப்னா கிங் கோப்ராஸ் 76
- கொக்குவில் ஸ்ரார் 9 ஓட்டங்களால் வெற்றி
- ஆட்டநாயகன் அஜித்குமார் 5 விக்கெட்டுக்கள் 17 ஓட்டங்கள்



- AA சுப்பர் கிங்ஸ் எதிர் நோ நேம் கிரிக்கெட் கிளப்
- AA சுப்பர் கிங்ஸ் 57
- நோநேம் கிரிக்கெட் கிளப் 55
- AA சுப்பர் கிங்ஸ் 2 ஓட்டங்களால் வெற்றி
- ஆட்டநாயகன் அனுந்துஜன் 5 விக்கெட்டுக்கள் 3 ஓட்டங்கள்



- சாவா ஸ்பார்ட்டன்ஸ் எதிர் வட ஸ்ரைக்கேர்ஸ்
- சாவா ஸ்பார்ட்டன்ஸ் 127/4
- வட ஸ்ரைக்கேர்ஸ் 54
- சாவா ஸ்பார்ட்டன்ஸ் 73 ஓட்டங்களால் வெற்றி
- ஆட்டநாயகன் ரஜிகரன் 56 ஓட்டங்கள்

## வீட்டில் பூட்டி...

டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வவுனியா, செட்டிகுளம், பெரியதம்பனை, மருதங்குளி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து 7 வயது சிறுமி ஒருவரை பல நாட்களாக தொடர்ச்சியாக தாயார் மற்றும் தாயாரின் மறுதார கணவர் ஆகியோர் அடித்து, சூடு வைத்து துன்புறுத்தி வந்துள்ளனர்.

இந்நிலையில், நேற்றைய தினமும் குறித்த சிறுமி தாயாரால் அடித்து துன்புறுத்தப்பட்டு வீட்டு அறை ஒன்றில் தனியாக வைத்து பூட்டப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் செட்டிகுளம் பிரதேச செயலக பெண்கள், சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தியதையடுத்து அவர்கள் அங்கு சென்றிருந்தனர்.

இதன்போது வீட்டில் எவரும் இல்லாத நிலையில் குறித்த சிறுமியை வீட்டு அறை ஒன்றில் பூட்டி வைத்திருந்த நிலையில் மீட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ள செட்டிகுளம் பிரதேச செயலக பெண்கள், சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்கள் சிறுமியின் வாக்குமூலம் மற்றும் சிறுமியின் உடலில் இருந்த துன்புறுத்தல் காயங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், குறித்த சிறுமியை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சிறுமி தொடர்பில் வழக்குப் பதிவு செய்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,281)

## இலங்கையில்...

வாக்கும் பயிற்சி திட்டத்தில் நேற்று திங்கட்கிழமை உரையாற்றும்போதே புகையிலை மற்றும் ஆல்கஹால் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் மருத்துவர் சமாதி ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

புகையிலை நிக்கொட்டினா என்னும் பேரினத்தைச் சேர்ந்த தாவரத்தின் இலைகளிலிருந்து செய்யப்படுகின்றது. மிகப் பழங்காலம் தொட்டே இது அமெரிக்கக் கண்டத்தில் பயன்பட்டு வந்துள்ளது.

ஐரோப்பியர்கள் அமெரிக்காவுக்கு வந்ததிலிருந்து இது ஒரு வணிகப் பண்டம் ஆனதுடன், பொழுதுபோக்குத் தேவைகளுக்கான ஒரு பொருளாகவும் பிரபலமானது.

இதனை இலங்கை மக்களும் வெற்றிலை பாக்குடன் இணைத்து உண்பதுடன் புகைத்தலுக்கும் பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பேத்தியின்...

வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றிருந்த சமயம் பேத்தியின் நீராட்டு விழா கடமையில் இருந்த பேத்தியின் தாத்தா திடீரென கிழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச்சேர்ந்த மாணிக்கம் நடேசன் (வயது - 74) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-3,316)

## குளிரூட்டப்பட்ட...

வுள்ளது.

எதிர்வரும் 29, 30, 31 மற்றும் செப்ரெம்பர் முதலாம் திகதி என நான்கு நாட்களுக்கு பரீட்சார்த்தமாக நடத்தப்படும் இந்தச் சேவை மக்களின் தேவையறிந்து தொடர்ந்து முன்னெடுப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனா தொற்றுநோய் காரணமாக கடந்த மார்ச் 20ஆம் திகதி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட யாழ்ப்பாணம் - கொழும்பு இடையேயான குளிரூட்டப்பட்ட நகர்சேர் தொடருந்து சேவை ஆசனப் பதிவுகள் போதாத நிலை காணப்பட்டதால் மீள ஆரம்பிக்கப்படவில்லை.

குறித்த தொடருந்து சேவை வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5.10 மணிக்கு கல்கிசையிலிருந்து புறப்படும்.

அதேபோன்று காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 1.15 மணிக்கு கல்கிசை நோக்கிப் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவைக்கான ஆசனங்களை முன்பதிவு செய்ய முடியும் என்று ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## இந்திய இழுவைப்...

இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி இரணைதீவு உள்ளிட்ட பகுதிகளில் மீண்டும் இந்திய இழுவைப் படகுகளின் வருகை அதிகரித்துள்ளதாகவும், இந்த அரசின் காலத்தில் மீண்டும் இவ்வாறான பிரச்சினை எழுந்துள்ளதாகவும் மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த பிரச்சினைக்கு துறைசார்ந்த அமைச்சர் என்ற வகையில் தீர்வை பெற்றுக் கொடுப்பீர்களா என அவரிடம் ஊடகவியலாளர் வினவினார்.

குறித்த விடயம் தொடர்பில் இதுவரை எனக்கு யாரும் தெரிவிக்கவில்லை. இவ்விடயம் தொடர்பில் எனக்கு தெரியாது.

ஆனாலும் இந்திய இழுவைப்படகு பிரச்சினை என்பது இரணைதீவிற்கு மாத்திரமல்ல வடக்கு மாகாணத்திற்கே பெரும் சவாலாக காணப்படுகின்றது.

இந்த நிலையில் இந்திய அரசுடன் தொடர்ந்தும் பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றோம்.

வடக்கில் அச்சுறுத்தலாக காணப்படும் இந்திய இழுவைப் படகினை எல்லை பகுதிக்குள் அனுமதிக்காதவாறு தடுப்பதற்கான உறுதிப்பாட்டினை அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் விரைவில் இரணைதீவு பகுதிக்கும் செல்வோம். அப்போது குறித்த விடயம் தொடர்பில் விரிவாக கவனம் செலுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இரணைதீவு மக்கள் தமது பூர்வீக இடங்களில் கட்டுமான பணிகளை முன்னெடுப்பதற்கு கடற்படையினர் தடுத்து வருவதாகவும், தங்கி நின்று மீன்பிடியில் ஈடுபட மாத்திரமே அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் என்ற வகையிலும், அமைச்சர் என்ற வகையிலும் அவர்களின் பிரச்சினைக்கு எவ்வாறான தீர்வை பெற்றுக் கொடுக்க உள்ளீர்கள் என இதன்போது ஊடகவியலாளர் வினவினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், இரணைதீவு மக்களின் மீள்குடியேற்றத்திற்கு அப்போது எதிர்க்கட்சியில் இருந்தாலும் எனது பங்கும் இருந்தது.

இவ்வாறான நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பில் எனக்கு இதுவரை யாரும் தகவல் தரவில்லை.

அவர்களின் வாழ்வாதாரம் சார்ந்த முக்கிய விடயங்களில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். கடலட்டை வளர்ப்பு பண்ணைகளை அமைத்து கொடுத்துள்ளோம்.

மேலும் பல தொழில்சார் வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். ஆனாலும் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் எமது கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

அடுத்துவரும் வாரத்தில் அப்பகுதிக்கு செல்ல உள்ளோம். இதன்போது இந்திய இழுவைப் படகு மற்றும் அவர்களின் தொழில் மற்றும் குடியிருப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,100)

## தண்ணீர் போத்...

டுள்ள பாதிப்பு குறித்து விரிவான அறிக்கையை சுற்றுச்சூழல் அதிகாரசபை சமர்ப்பித்துள்ளது.

சுற்றுச்சூழல் அதிகாரசபையின் இயக்குநர் ஹேமந்த ஜெயசிங்க கூறுகையில்,

குளிர்பானங்களைக் கொண்ட சிறிய பிளாஸ்டிக் போத்தல்களைப் பயன்படுத்துவதும் இந்த திட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்பட உள்ளது.

பிளாஸ்டிக் தயிர் கரண்டிகள் மற்றும் சட்டைகளை பொதி செய்ய பயன்படும் பிளாஸ்டிக் கிளிப்களுக்கான சாத்தியமான மாற்று வழிகளையும் சுற்றுச்சூழல் அதி கார சபை பரிசீலித்து வருகிறது என்றார். (ம-3)

## சட்டங்களை...

முறைக்குக் கொண்டு வருவது என்பது ஓரிரு நாட்களுக்குள் செய்து முடிக்கக்கூடிய காரியம் கிடையாது.

அமைச்சரவை முதலில் அங்கீகாரம் வழங்க வேண்டும். பின்னர் பாராளுமன்றில் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதற்கு சில காலம் தேவைப்படும். எவ்வாறாயினும், இதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம்.

மக்களின் பாதுகாப்புக்காக ஜனாதிபதி மேற்கொள்ளும் திட்டங்களுக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம்.

இந்த அரசாங்கத்தில் முன்னாள் அரசாங்கத்தின் குறைபாடுகள் இருக்காது. நாம் பொலிஸாரின் பலத்தை அதிகரிக்க வேண்டும்" எனக் கூறினார். (ம-3)

## 19ஆவது திருத்த...

பலப்படுத்தப்படு வதற்கு பதிலாக அடிமைச் சமூகம் உரு வாகும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி யின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ரஞ்சித் மத்தும பண்டார கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இது கூறப்பட்டுள்ளது.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்து, ஜன நாயகத்தை பின் நோக்கி இழுக்கும் செயற்பாடுகளுக்கு இடமளிக்கப் போவதில்லை.

இதற்கு எதிராக அனைத்து சக்திகளை இணைத்துக் கொண்டு போராட்டங்களை முன்னெடுக்கஉள்ளதாகவும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## விக்னேஸ்வர...

வரனுக்கு முடிவு கட்டுவோம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் 24


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 24-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2519
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 49 74 77 78
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/08/24
சீட்டிழுப்பு இலக்கம் 4224
ஆங்கில எழுத்து U வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 2 6 8 6 3
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020 / 08 / 24 சீட்டிழுப்பு இலக்கம் 1529
சுப்பர் இலக்கம் 05 வெற்றி இலக்கங்கள் 11 30 35 55
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0591
G 21 42 49 74 78

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1607 திகதி 2020/08/24
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 09 22 26 52
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 1020 வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.08.24
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 63,681,555/-
வெற்றி இலக்கங்கள் 38 58 66 76 Z
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 2405
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 856

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3355 திகதி: 2020.08.24
நிலம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 06 29 71 S
அடுத்த புதன்கிழமை ஜக்பொட் ரூ. 37,770,828/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1198
சீட்டிழுப்பு திகதி 24.08.2020 ஊதா
0 07 16 21 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,820,745.20

ராசி
வெற்றி வாரம் 2901 வர்ணம் மஞ்சள் திகதி 24.08.2020
வெற்றி இலக்கங்கள் 06 15 34 46 மிதுனம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,528,196
Web: www.dlb.lk

## யாழில் ஹெரோயின் விற்றவரை
# பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யர்ழ்ப்பாணம் மாநகரில் உயிர்க் கொல்லி போதைப்பொருளான ஹெரோயினை விற்பனை செய்யும் முகவர் மற்றும் அவரது உதவியாளர் இருவரையும் எதிர்வரும் ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அந்தப் பகுதியில் தேடுதல் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது போதைப்பொருள் விநியோகிக்கும் இருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளியைச் சேர்ந்த ஹெரோயின் போதைப்பொருள் முகவரிடமிருந்து 56 கிராம் 968 மில்லிக்கிராம் போதைப்பொருளும், கொக்குவிலைச் சேர்ந்தவரிடம் 9 கிராம் 656 மில்லிக்கிராம் போதைப்பொருளும் மீட்கப்பட்டது. அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்கள் இருவருக்கும் வெவ்வேறு வழக்குகளைத் தாக்கல் செய்த யாழ்ப்பாணம் பொலிஸார், அவர்கள் இருவரையும் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி கோரி மன்றில் விண்ணப்பம் செய்தனர். வழக்கை ஆராய்ந்த நீதவான், சந்தேக நபர்கள் இருவரையும் வரும் ஓகஸ்ட் 31 ஆம் திகதிவரை பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதியளித்தார். அத்துடன், ஏனைய இருவரையும் வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-3,8)


## வேலை வாய்ப்பு

அரச அங்கீகாரம் பெற்ற எமது நிறுவனமானது யாழ்ப்பாணத்தில் புதிய கிளையினை நிர்மாணித்துள்ளது. முல்லைத்தீவு. மன்னார். வவுனியா ஆகிய மாவட்டங்களில் மேலும் புதிய கிளைகளை நிறுவவுள்ளது.

**அதற்கான வேலையாட்கள் பின்வரும் நிபந்தனைக்கு அமைய கோரப்படுகின்றனர்.**

கல்வித் தகைமை : தரம் 10, O/L, A/L உடன் , வயதெல்லை : 18 - 30

(3679)

**தொடர்புகளுக்கு : 077 934 6224**



## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரிதகதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express

இல.401 மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 2931062 077 6655413

(C-139)



## காணி தேவை - குத்தகைக்கு

K.K.S றோட்டில் / மருதனார் மடம் சந்திக்கும் உப்புமடம் சந்திக்குமிடையில் குறைந்தது 2 பரப்பு காணி குத்தகை அடிப்படையில் தேவை.

வியாபாரம் செய்வதற்கு

( நிரந்தர கட்டடம் எதுவும் அமைக்கப்பட மாட்டாது. )

(C-138)

**தொடர்புகளுக்கு : 071 735 5929**


## யாழில் வாள்வெட்டு சந்தேகநபர் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் அல்வாய் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர் அல்வாய் பிரதேசத்தினை சேர்ந்த 30 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டது. அல்வாய் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்கே நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதன் போது ஐந்தாவது சந்தேக நபர் என கூறப்பட்ட இளைஞன் ஒருவர் கைதாகியுள்ளதாக பொலிஸார் கூறினர். அவரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கொள்ளைகளுடன் தொடர்புடையவர் வடமராட்சியில் கைது

(கரணவாய்)

வடமராட்சி மந்திகைப் பகுதியில் இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொண்ட பிரதான சந்தேக நபரும், வடமராட்சிப் பகுதியில் இடம்பெறும் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் நேற்று திங்கட்கிழமை இரவு இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட திடீர் நடவடிக்கையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்த போதும் அவர் தலைமறைவாகி இருந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை இரவு அவரின் வீட்டில் அவர் இருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து அவரை கைது செய்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (ம-3,60)

## விக்னேஸ்...

வீர வன்ஸ தெரிவித்துள்ளார்.

ஹோமாகமவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

விக்னேஸ்வரன் பாராளுமன்றுக்கு வந்து உலகிலேயே மூத்த மொழி தமிழ் மொழி என் கருத்து வெளியிட்டுள்ளார். அவருக்கு நன்றாகத் தெரியும், அப்படி கூறினால் இனவாதத்தை இலகுவாகத் தூண்டிவிட முடியும் என்று.

எம்மைப் பொறுத்தவரை யாழில் இருந்து வந்த சுதந்திரக் கட்சி உறுப்பினருக்கும் கிழக்கிலிருந்து வந்த அதாவுல்லா போன்றோருக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்க வேண்டும்.

இதுதான் எமது நிலைப்பாடாகும். இதுதான் ஜனநாயகத்தை பலப்படுத்தும் வழிமுறைகளாகும். நாம் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது தான் அனைத்து சமூகங்களும் முன்னேற்றமடையும்.

அப்போது மட்டும்தான், சம்பந்தன் மற்றும் விக்னேஸ்வரனின் இனவாத அரசியலுக்கும் தேவை ஏற்படாது போகும். இன்னும் சில நாட்களில் புதிய அரசியலமைப்பு ஸ்தாபிக்கப்படவுள்ளது. இதன் ஊடாக இந்த நாடு மேலும் பலமடையும் என்றார். (ம-3)


## துர்க்கா திருமண சேவை

83, கேட்டை, 8இல் செவ்வாய், 35 பாவம், சைவபோசன மணமகனிற்கு மணமகள் தேவை.

(3677)

**077 818 5978, 075 011 1122**



## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(C-112)

**0768226240**



## வான் விற்பனைக்கு

HIJET டொடலீ

சிறிய வான் விற்பனைக்குண்டு.

வீட்டுப் பாவனைக்கு மிக உகந்தது.

JQ xxxx

(3681)

**077 749 4919**



## Inuvil Public Library
# Junior Smart Center

**Vacancies for Pre-school Teachers/ Assistant Teachers**

**Walk – in - Interview**

நவீன மயப்படுத்தப்பட்ட முன்பள்ளியில் கற்பிப்பதற்கு பொருத்தமான ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பின்வரும் நிபந்தனையை பூர்த்தி செய்தவர்கள் எதிர்வரும் 29.08.2020 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நூலகத்திற்கு தங்கள் சுயவிபரக் கோவை மற்றும் ஏனைய தொழிற் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமூகம் தரவும்.

- வயதெல்லை – 18 வயதிற்கு மேற்பட்டவராயிருத்தல்.
- க.பொ.த உயர்தர சித்தி.
- க.பொ.த சாதாரண தரம் ஆங்கில பாடத்தில் சித்தி.
- தேசிய அடையாள அட்டை.
- வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம்.

29.08.2020 Saturday & 3.00 pm

(C-137)



இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம்,
இணுவில் மானிப்பாய் வீதி, இணுவில்.
**021 224 1930**



## IELTS 6.5 புள்ளிகட்குமேல் பெற வேண்டுமா?

**4 வார இறுதிகள் ( 8 வகுப்புகள், 60 மணித்தியாலங்கள் ) மட்டுமே. பரீட்சைக்கு முன் மேலதிக பயிற்சி.**

(3680)



- கொழும்பு / கண்டியிலிருந்து வருகைதரும் பயிற்சியாளர்களால் தரமுயர்த்தப்படுவீர்கள்.
- யாழ்ப்பாணத்தில் ஆரம்பம் - 5 செப்டெம்பர் 2020.
- ஒரு வகுப்பில் 20 பேர் மட்டுமே. முன்பதிவு அவசியம்.
- உலகின் அனைத்து நாடுகளின் பல்கலைக்கழக அனுமதியுடன் STUDENT VISA பெற.

Ae ASPIRATIONS EDUCATION (PVT) Ltd.
204, SIR PON RAMANATHAN ROAD, JAFFNA.
021 221 5232 / 077 477 5343 / 076 824 5385

மேலும் ஒரு சேவையாக
அனைத்து நாடுகளுக்குமான சகல
VISA APPLICATIONS பூர்த்தி செய்து அனுப்பப்படும்.
www.aspirations.edu.lk


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.